காலை முரசு
பக்கங்கள்:-31

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு




ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைப் பெறு பேறுகள் நேற்று மாலை வெளியிடப் பட்டுள்ளன என்று பரீட்சைகள் 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 15 | ஞாயிற்றுக்கிழமை | 27.04.2025 | அதிர்வு 266

# யாழ்.இரட்டையர்கள் சாதனை!

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகளில் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சிவநாதன் ஜமுனானந்தாவின் இரட்டைப் புதல்வர்கள் சாதனை படைத்துள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்க ளான இருவரும் உயிரியல் பிரிவில் 3 ஏ பெற்று மாவட்ட ரீதியில் 1ஆம், 2ஆம் இடங்களையும், அகில இலங்கை ரீதி யில் 3ஆம், 5ஆம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

ஜமுனானந்தா பிரணவன் (முதலாம் இடம்) மற்றும் ஜமுனானந்தா சரவணன் (இரண்டாம் இடம்) ஆகிய இருவருமே இவ்வாறு சாதனை படைத்துள்ளனர்.



# தமிழ் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையை கடுகளவேனும் சீர்குலைக்கப்போவதில்லை!

## புதுக்குடியிருப்பில் ஜனாதிபதி அநுர சத்தியம்

"பாதுகாப்புக் காரணங்களுக்காக வடக்கு, கிழக்கில் அரசு கையகப்படுத் திய அனைத்து காணிகளையும் மிக விரைவில் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையைக் கடு களவேனும் சீர்குலைக்கப் போவ தில்லை."

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 07

# தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் வரிசைகளில் முதலில் நிற்கத் தயாராகுங்கள்

## முன்னாள் அமைச்சர் ராஜித கூறுகின்றார்



"மே மாதத்திலிருந்து இந்த நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடிகள் ஆரம்பமாகும். ஆகஸ்டில் அதன் பிரதி பலன்கள் வெளிவர ஆரம்பிக்கும். டிசம் பரில் மீண்டும் வரிசைகளில் காத்திருப் பதற்கு மக்கள் தயாராக வேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் வரி சைகளில் முதலில் நிற்கத் தயாராகுங் கள்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"முன்னாள் ஜனாதிபதி 06




கோட்டாபய அரசை வீழ்த்துவதற்கான 'அற கலய' போராட்டம் கொழும்பு காலிமுகத் திடலில் தான் நடைபெற்றது.

கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஆட்சிக்கு வந்ததும் மக்கள் போராட்டம் செய்வதற்கான இடம் என்று காலிமுகத் திடலில் ஒரு பகுதியைத் தாமே ஒதுக்கிக் கொடுத்தார். அங்கிருந்துதான் அவரைப் பதவியி லிருந்து அகற்றும் போராட்டமே முன்னெடுக்கப் பட்டது.

அதனை அடுத்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது ஆட்சியைத் தக்க வைப்பதற்காக காலிமுகத் திடலை மக்கள் கூடுவ தற்கான அரசியல் நிகழ்வுகளுக்கு வழங்குவ தில்லை என்ற முடிவை எடுத்து அறிவித்திருந்தார்.

இப்போது அந்த முடிவை மாற்றுவதற்கு அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

அந்தத் தடையை நீக்கி, விட்டு வரும் மே முத லாம் திகதி ஆளும் தேசிய மக்கள் சக்தி தரப்பின் மே தினக் கூட்டத்தை ஜனாதிபதி 06





# நிரந்தர தீர்வு வேண்டும் என்பதை மீண்டும் எடுத்துரைக்க வீட்டுக்கு வாக்களியுங்கள்!

## மன்னார் பரப்புரைக் கூட்டத்தில் சாணக்கியன் எம்.பி. வேண்டுகோள்

(எஸ்.றொசேரியன் லெம்பேட்)

“இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை எடுத்துச் சொல்வதற்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று சனிக்கிழமை மாலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு, கிழக்கில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெற்ற வாக்குகளை விட இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிகளவான வாக்குகள் கிடைத்தால் மட்டுமே நாங்கள் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுகின்ற போது எமது உரைகளுக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

இந்த நாட்டில் அரசியல் தீர்வு என்பது ஒரு முக்கியமான விடயம். நிரந்தரமான அரசியல் தீர்வு என்பது சமஷ்டி முறையில் கிடைக்க வேண்டும் என்பதை எமது கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் கூறியிருந்தார்.

இந்த நாட்டிலே எமது மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு இல்லாது விட்டால் இந்த நாட்டில் எமக்கு நிரந்தரமான வாழ்வு இல்லை என்பதையும் அவர் கூறியிருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு இன்று தென்னிலங்கையில் என்.பி.பி. அரசு, இலங்கைத் தமிழரசுக் கட்சியை வடக்கு, கிழக்கு மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று கூறுகின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் அரசியல் தீர்வைக் கேட்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள். இன்று வடக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் என்.பி.பியினுடைய கவனம் கூடுதலாகச் செலுத்தப்படுகின்றது. அவர்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது வடக்கில் வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்கள். ஆசனங்களைப் பெற்று ருசி கண்டார்கள். கிழக்கு மாகாணத்தில் பாரிய அடி வாங்கினார்கள்.

என்.பி.பி. அரசின் அபிவிருத்திகளுக்காகத் தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்றால் கடந்த 6 மாதங்களுக்குள் என்ன நடந்துள்ளது என்பதை மக்கள் சற்று திரும்பிப் பார்க்க வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட எந்த வாக்குறுதிகளை அவர்கள் கடந்த 6 மாதங்களுக்குள் நிறைவேற்றியுள்ளார்கள் என்று பார்க்க வேண்டும்.

கடந்த 6 மாதங்களுக்குள் மன்னாரில் என்ன நடந்துள்ளது என்று பார்க்க வேண்டும். மன்னாருக்கு வந்த ஜனாதிபதி சில வாக்குறுதிகளை வழங்கி விட்டுச் சென்றுள்ளார்.

ஆனால், நாடாளுமன்றத் தேர்தலின் போது மன்னாருக்கு வருகை தந்து வழங்கிய வாக்குறுதிகள் எல்லாவற்றையும் அவர் மறந்து போய் விட்டார். பொய் சொல்வதையே ஒரு தொழிலாக என்.பி.பி. அரசு வைத்துள்ளது.

தமிழ் மக்கள் மடையர்களாக இருப்பார்கள் என்ற எண்ணம் இருக்கலாம். அதை மாற்றி அமைப்பதற்கான ஒரு தேர்தலாக இந்தத் தேர்தல் அமைய வேண்டும்.” – என்றார்.



















# வவுனியா பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி!

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டார்.

வவுனியா மாநகர சபை உள்ளிட்ட 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களைப் வெற்றி பெறச் செய்வதற்கான பிரச்சாரக் கூட்டம் வவுனியா மாநகர சபை மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அதிகளவிலான மக்கள் இந்தக் கூட்டத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இதில் விசேட அதிதியாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டு உரையாற்றியதுடன், வேட்பாளர்கள், பொது மக்களுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது பொதுமக்கள் ஜனாதிபதிக்குக் கைகொடுத்து செல்பி எடுப்பதற்கு முண்டியடித்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வேட்பாளர்கள், மதகுருமார், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# உள்ளூராட்சி வேட்பாளரின் கணவர் போலி ஆவணங்களுடன் சிக்கினார்



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் கணவர் பாணந்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி ஆவணங்களைத் தயாரித்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை வடக்கு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் பாணந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 66 வயதுடைய பண்டாரகம பிரதேச சபையின் ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவர் ஆவார்.

சந்தேகநபரின் மனைவி எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள், கிராம சேவைச் சான்றிதழ்கள், போலி முத்திரைகள் தயாரித்தல் போன்ற குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையில் சந்தேகநபரிடமிருந்து பல போலி ஆவணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்



# யாழ்.இந்துவில் 55 பேருக்கு 3 ஏ




நேற்று இரவு வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி யாழ்ப்பாணம் இந்து கல்லூரியிலிருந்து 55 மாணவர்களுக்கு மூன்று பாடங்களில் “ஏ” சித்தி கிடைத்திருக்கின்றது.

33 மாணவர்கள் இரண்டு பாடங்களில் “ஏ” சித்தி பெற்றிருக்கிறார்கள்.

உயிரியல் பிரிவில் 22 பேரும், பௌதீகவியல் பிரிவில் 27 மாணவர்களும், வர்த்தகத் துறையில் ஒருவரும் மூன்று பாடங்களிலும் “ஏ” சித்தியை பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிரியல் விஞ்ஞானத்தில் மாவட்ட நிலையில் 1, 2, 3, 4 ஆம் இடங்கள், வர்த்தகத்தில் மாவட்ட நிலையில் முதலாம் இடம், பொறியியல் தொழில் நுட்பத்தில் மாவட்ட மாவட்ட நிலையில் முதலாம் இடம், பௌதீக விஞ்ஞானத்தில் மாவட்ட நிலையில் இரண்டாம் இடம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பத்தில் மாவட்ட நிலையில் இரண்டாம் இடம் யாழ் இந்துவுக்குக் கிடைத்துள்ளது.

## வவுனியா மாவட்டத்தில்

## கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவன் கணிதப் பிரிவில் முதலிடம்



(கி.வசந்தன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் கணிதப் பிரிவில் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவன் குகதாசன் தனோஜன் முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மேற்படி மாணவன் மூன்று பாடங்களில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 144 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.



## வவுனியாவில் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் விஞ்ஞானப் பிரிவில் முதலிடம்!

(கி.வசந்தன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் முகமட் முபாரக் முகமட் பர்ஹத் முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மேற்படி மாணவன் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 187 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

## வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி கலைப் பிரிவில் முதலிடம்!



(கி.வசந்தன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி முகம்மது பைசல் பாத்திமா அஸ்ரா முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மேற்படி மாணவி தமிழ், அரசியல், பொருளியல் ஆகிய பாடங்களில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 94 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.



## வவுனியா மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் நெளுக்குளம் மாணவி பிதுர்சா முதலிடம்!

(கி.வசந்தன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவி பிதுர்சா சற்குணம் முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மேற்படி மாணவி 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 357 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

# மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி வீடு சேதம்





யாழ். புன்னாலைக்கட்டுவன், திணைப்புலம் பகுதியில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி வீடு ஒன்று பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மூன்றுமணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக வீட்டில் இருந்துள்ளார்.

எனினும், மின்னல் தாக்கத்தால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதுடன், பயன் தரு மரங்களும் முறிந்து விழுந்துள்ளன.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுரகுமார திஸநாயக்க தலைமையில் அங்கு நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

மே தினத்துக்கு இன்னும் நான்கு நாள்கள்தான் உள்ளன. மற்றைய பிரதான கட்சிகளின் மே தின நிகழ்வு எங்கு நடக்கும், நடைபெறுமா என்பவை இன்னும் தெளிவாகவில்லை.

வடக்கில் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் ஓரிடத்தில் மே தின ஒன்று கூடலை அல்லது கூட்டத்தை நடத்தத் திட்டமிடுவதாகத் தெரிகிறது.

ஏனைய கட்சிகளும் கடைசி நேரத்தில் திடுதிப்பென ஒரு சின்ன கூட்டத்தை ஏற்பாடு செய்து கொண்டு மேதின நடவடிக்கை என அடுத்து வரும் நாள்களில் ஆரவாரம் பண்ணும் என நம்பப்படுகின்றது.

\+ + +

வடக்கில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றுவதற்கு வந்திருக்கும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நேற்று மன்னார் மற்றும் சாவகச்சேரியில் பிரசாரக் கூட்டங்களில் தாம் ஆற்றிய உரைகளில் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தான் தனித்துப் பெற்ற விருப்பு வாக்குகளுக்குக் குறைந்த தொகையிலேயே வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிட்ட சங்கு சின்னக் கூட்டணி பெற்றதாக அவர் சுட்டிக் காட்டினார்.

தமக்குக் கிடைத்த விருப்புவாக்குகளின் அரைவாசி அளவு தொகையையே வடக்கு, கிழக்கு முழுவதிலும் சைக்கிள் அணியும் பெற முடிந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதிக அளவு விருப்பு வாக்குகளைப் பெற்ற இரா.சாணக்கியன் அப்படி பேசுவதை ஏனைய கட்சியினர் பொறுத்துத் தான் செல்ல வேண்டி இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் பேசும் சாணக்கியன், சுமந்திரன், சி.வி.கே. சிவஞானம் போன்றோர் தாங்கள் மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகளை விமர்சிக்கவே மாட்டோம் என்று சொல்லிச் சொல்லியே நாசூக்காக அவர்களைப் போட்டு அடித்துச் செல்கின்றனர் என்று இந்தக் கூட்டங்களுக்கு தவறாது விஜயம் செய்யும் கொக்குவில் அன்பர் ஒருவர் தெரிவித்தார்.

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்க வங்குரோத்து நிலைமையிலிருந்து நாட்டை மீட்டுள்ளதை சர்வதேசம் வரவேற்கின்றது. ஆனால், எமது நாட்டிலுள்ள கட்சி அரசியல் முறைமையால் அவரை விமர்சிக்கும் சூழலே காணப்படுகின்றது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன. ஆனால், இன்று கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காக நாட்டைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டை செயற்படுத்தி, வட்டியையும் செலுத்திக் கொண்டு மக்களுக்கான நிவாரணங்களையும் வழங்கிக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுத்தார்.

ஆனால், இன்று இந்த அரசு மக்களுக்கு எந்த நிவாரணங்களையும் வழங்காமல் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனை மீள செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீடிக்குமாறு கோரி கடிதம் அனுப்பியிருக்கின்றது. ரணில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறு கால அவகாசம் கோரவில்லை.

அரசின் செயற்பாடுகள் தொடர்பான பெபேறுகள் இப்போதிருந்தே வெளிவர ஆரம்பித்துள்ளன. மே 6ஆம் திகதியின் பின்னரே முழுமையான பெபேறுகள் வெளிவரும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இங்கிருந்து கொண்டு அமெரிக்காவுடனான பேச்சில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று கூறுகின்றார்.

அவ்வாறு எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. இது குறித்து ட்ரம்பிடம் நேரடியாகப் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும். எலோன் மாஸ்க்குடன் இணைந்தே ட்ரம்ப் இந்தத் தீர்மானங்களை முன்னெடுக்கின்றார். எலோன் மாஸ்க்குடன் ரணில் விக்கிரமசிங்க நேரடித் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றார்.

எனவே, தற்போது ரணில் ஆட்சியில் இருந்திருந்தால் எலோன் மாஸ்க் ஊடாக ட்ரம்புடன் பேச்சுகளை ஏற்பாடு செய்து நிவாரணத்தைக் கோரியிருப்பார். பூகோளமயமாக்கலுக்கு மத்தியில் எமது நாடு தனித்துப் பயணிக்க முடியாது." - என்றார்.

## ஜி.சீ.ஈ. உயர்தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிட முடியும்.

இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 33 ஆயிரத்து 185 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

# முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“காணிகளை விடுவித்து மக்கள் விவசாயம் செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு தயாராக இருக்கின்றது.

நாம் சிங்கள மக்களுடன் அதிகளவில் நெருங்கிப் பழகுகின்ற போதிலும் அவர்கள் மத்தியில் அதிகளவில் பொதுக் கூட்டங்களை நடத்திய போதிலும் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையைக் கடுகளவேனும் சீர்குலைக்கப் போவதில்லை.

எனவே, மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையைப் பலப்படுத்தும் செயற்பாடுகளையே எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளோம்.

எமது அரசின் செயற்பாடுகளால் எமக்கு வாக்களிக்காத மக்களிடமிருந்தும் எம் மீது நம்பிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி அரசின் முதலாவது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் உருவாக்கப்படும். அங்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தில் பங்குகொள்ளுமாறு புலம்பெயர் தமிழர்களை அழைக்கின்றோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இனவாத அரசியல் இனியும் எமக்கு வேண்டாம்.

கடந்த காலங்களில் அனைத்து சலுகைகளையும் அமைச்சர்களும், ஜனாதிபதிகளுமே பெற்றுக்கொண்டனர்.

பொதுமக்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் வழங்கப் படவில்லை.

நாங்கள் கொள்ளையடிக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், இதுவரை திருடியவர்கள் குறித்து எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றீர்கள் எனக் கேட்கின்றனர்.

கண்டிப்பாக அவர்களை அடையாளம் கண்டு நீதி மன்றத்தில் முன்னிறுத்தி தண்டனை பெற்றுத்தருவோம்.

தற்போது பல்வேறு மாகாணங்களில் உள்ள அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்று வருகின்றனர்.” – என்றார்.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தவறாது வாக்களிக்குக!

நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பொது மக்களின் ஆர்வம் குறைவாக இருப்பதாக தேர்தல் கண்காணிப்பு மையமான 'பவ்ரல்' அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இப்படி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து மக்களின் ஆர்வம் குறைந்திருப்பதற்கு பல காரணங்கள் உண்டு என்றும் அவர் குறிப்பிடுகிறார். எது,எப்படியாயினும் மக்கள் ஆறாம் தேதி வாக்குச்சாவடிகளுக்கு சென்று தங்கள் வாக்குகளை அளிப்பது முக்கியம் என்று அவர் கூறியிருக்கிறார்.

தமிழர் தாயகத்திலும் - வடக்கு, கிழக்கிலும் - இந்த வாக்களிப்பில் தமிழ் மக்கள் பங்குபற்றுவது மிக மிக அத்தியாவசியமானது.

நேற்று வெளியான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்கு சின்ன அணியின் உள்ளூராட்சி தேர்தல் அறிக்கையில் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையில் இது விடயத்தை ஒட்டி கூறப்பட்டுள்ள அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

# சிங்கள ஆக்கிரமிப்புகளிலிருந்து தமிழ்ப் பிரதேசத்தைப் பாதுகாக்க -

# தாயகக் கோட்பாட்டை தமிழ் மக்கள் கைவிட்டுள்ளனர் என்றும் ஆளும் கட்சியினர் முடுக்கிவிட்டுள்ள பிரசாரங்களை முறியடிக்க -

# வடக்கு - கிழக்கிலிருந்து தமிழ் மக்கள் தமக்கு பெருமளவு ஆதரவை வழங்கியிருக்கின்றனர் எனவும் தமிழ்க் கட்சிகள் ஒதுங்கி நின்றால் தாமே பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகவும் கதையளக்கத் தொடங்கியுள்ள அரசுத் தரப்பின் வாய்களை அடக்க -

# இனமோதல் தீர்வுகள் தொடர்பில் பேசவல்ல இந்தியா உள்ளிட்ட சர்வதேச சக்திகளின் நிலைப்பாடுகளில் காத்திரமான செல்வாக்கைச் செலுத்த -

# இந்தத் தேர்தலின் முடிவுகளினூடாக, சிங்கள மேலாதிக்க ஆக்கிரமிப்பாளர்களான ஜே.வி.பி. உள்ளிட்ட எந்தச் சிங்கள கட்சியையும் தமிழர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள் என்ற செய்தியை மிகத் தெளிவாக வெளிப்படுத்த -

# நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. என்ற மாயமானை ஆதரித்ததன் மூலம் தவறாக எழுதப்பட்ட விதியை திருத்தி எழுத -

இது போன்ற இன்னோரன்ன காரணங்களுக்காக தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தவறாது வாக்களிப்பது அவசியம். அதேநேரம் தமிழ்த் தேசியத்தின்பால் பற்றி நிற்கும் ஒரு கட்சிக்கு வாக்களிப்பது அதை விடவும் அவசியம். அத்தியாவசியம்.





# பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு வத்திக்கான் தூதரகத்தில் நாமல் எம்.பி. இரங்கல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்குச் சென்று மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்க்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இதன்போது இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பிரையன் உதைக்வே ஆண்டகைக்கும் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் உரையாடல் இடம்பெற்றது.

"கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்கு விஜயம் செய்து மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்க்கு எனது இரங்கலைத் தெரிவித்ததில் நான் பெருமை கொள்கின்றேன். மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் இரக்கம், பணிவு மற்றும் சமூக நீதிக்கான அர்ப்பணிப்பு ஆகியன உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களை ஆழமாகப் பாதித்தன." – என்று நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஆட்டோ மோதியதால் முதியவர் உயிரிழப்பு

ஆட்டோ மோதியதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அன்ரனி தேவதாஸ் (வயது 60) என்ற வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சைக்கிளில் கூலிவேலைக்கு சென்றுகொண்டிருந்தபோது பின்னால் வந்த ஆட்டோ மோதியதால் அவர் உடல் உபாதைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் அதிகாலை அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இரவு 07 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை



திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.












# பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு வத்திக்கான் தூதரகத்தில் பிரதமர் இரங்கல்!

பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்துக்கு விஜயம் செய்து மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்க்கு இலங்கை அரசினதும் மக்களினதும் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இதன்போது இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு, கத்தோலிக்க சமூகத்தின் ஆன்மீகத் தலைவரான திருத்தந்தையின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க சமூகத்துக்குத் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்தின் அப்போஸ்தலிக் பிரதிநிதி மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# சிவகாசி பட்டாசு ஆலையில் விபத்து: 3 பெண்கள் உயிரிழப்பு, 7 பேர் காயம்

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் நேற்று சனிக்கிழமை காலை ஏற்பட்ட வெடி விபத்தில் அடையாளம் தெரியாத 3 பெண்கள் உடல் சிதறி உயிரிழந்தனர். 7 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

சிவகாசியைச் சேர்ந்த ஜெய்சங்கர் என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று சிவகாசி அருகே உள்ள காளையார்குறிச்சியில் இயங்கி வருகிறது. நாக்பூரில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டுத் துறையின் அனுமதி பெற்று இயங்கும் இந்த ஆலையில், 30 இற்கும் மேற்பட்ட அறைகளில் பேன்ஸி ரக பட்டாசுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 50 இற்கும் மேற்பட்டோர் இங்கு பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை பேன்ஸி ரக பட்டாசுகளுக்கு மருந்து செலுத்தும்போது உராய்வு காரணமாக வெடி விபத்து ஏற்பட்டது. இதில், 2 அறைகள் சேதமடைந்தன. அங்கு பணியாற்றிய அடையாளம் தெரியாத 3 பெண்கள் உடல் சிதறி உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர். தகவலறிந்த சிவகாசி தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீயை அனைத்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கி இருந்த அடையாளம் தெரியாத மூன்று பெண்களின் சடலம் மீட்கப்பட்டு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன.

மேலும், காயமடைந்த 7 பேர் மீட்கப்பட்டு சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிவகாசியை சேர்ந்த பாக்கியம் என்ற பெண் நூறு சதவீத தீக்காயத்துடன் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவ இடத்தில் சார் ஆட்சியர் பிரியா மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நாம் ஆட்சிக்கு வருவது மக்களின் நலனுக்காகவே!

## கோவையில் த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு






"நாம் அரசியலுக்கு வந்துள்ளது மக்களுக்காகவும் மக்கள் நலனுக்காவும் மட்டும்தான். களத்தில் சென்று கலக்குங்கள். நம்பிக்கையுடன் இருங்கள். வெற்றி நிச்சயம்,"

– இவ்வாறு கோவையில் நடந்த பூத் கொமிட்டி முகவர்களுக்கான கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

கோவை எஸ்.என்.எஸ் கல்லூரியில் த.வெ.க. பூத் கொமிட்டி முகவர்களுக்கான இரண்டு நாள்கள் பயிற்சி பட்டறை நேற்று தொடங்கியது. இதில் கலந்து கொண்டு அக்கட்சியின் தலைவர் விஜய் உரையாற்றுகையில்,

"கோவையில் நடைபெறும் பூத் முகவர்களுக்கான பயிற்சி பட்டறை என்றாலே ஓட்டு தொடர்புடையது என நினைக்க வேண்டாம். ஓட்டு பெறுவது மட்டுமல்ல, நாம் ஆட்சிக்கு வந்தபின் என்ன செய்ய போகிறோம் என்பது குறித்தும் தெரிந்து கொள்வதற்குத்தான்.

நாம் ஆட்சிக்கு வர வேண்டும் என நினைப்பதே மக்களுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் மட்டுமே. மக்களுடன் எவ்வாறு இணைந்து செயல்பட போகிறோம் என்பதற்கு இந்த பயிற்சி பட்டறையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு முன் பலர் அரசியலில் வந்து சென்று இருப்பார்கள். பல வாக்குறுதிகளை கூறி ஆட்சியை பிடித்திருப்பார்கள். இனிமேல் அது நடக்காது. நம் கட்சி மீது நல்ல நம்பிக்கை கொண்டு வரப்போவது பூத் கொமிட்டி முகவர்கள் தான்.

பூத் முகவர்கள் போர் வீரர்களுக்கு சமமானவர்கள். உங்களுக்கு என்ன அனுபவம் உள்ளது என்று கேட்பார்கள். மனதில் நேர்மை, கறை படியாத அரசியல் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை, லட்சியத்துடன் உழைக்க தெம்பு, பேசுவதற்கு உண்மை, செயல்பட திறமை, அர்ப்பணிப்பு குணம் ஆகியவற்றுடன் களம் தயாராக உள்ளது. இதற்கு மேல் என்ன வேண்டும். களத்தில் சென்று கலக்குங்கள். நம்பிக்கையுடன் இருங்கள். வெற்றி நிச்சயம்," என்றார்.

முன்னதாக, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக காலை 11.07 மணிக்கு தனி விமானம் மூலம் கோவை வந்தடைந்தார். அவருக்கு கட்சி தொண்டர்கள் மேளதாளம் முழங்க விமான நிலையத்தின் நுழைவுவாயில் பகுதியில் இருந்து அவிநாசி சாலை வரை உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

சாலையின் இருபுறங்களிலும் தொண்டர்கள் மட்டுமின்றி குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என அனைத்து தரப்பினரும் விஜய்யை காண காத்திருந்தனர். சிட்ரா பகுதி மற்றும் நிகழ்ச்சி நடைபெற்ற எஸ்.என்.எஸ் கல்லூரி அமைந்துள்ள பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பொலிஸார் போக்குவரத்து சீரமைப்பு பணிகளை மேற்கொண்டனர். கோவையில் இரவு தங்கும் விஜய் இன்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சியிலும் பங்கேற்ற பின் இரவு சென்னை திரும்பி செல்கிறார்.



# ஈரான் துறைமுகத்தில் வெடிப்பு சம்பவம்: 4 பேர் உயிரிழப்பு, 500 பேர் படுகாயம்

தெற்கு ஈரானின், பண்டார் அப்பாஸ் பகுதியிலுள்ள ஷாஹித் ராஜீ துறைமுகத்தில் நேற்று ஏற்பட்ட பாரிய வெடிப்பு சம்பவத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் குறித்த சம்பவத்தில் 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கொள்கலன் தொகுதியில் இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

தீப்பரவல் காரணமாக மேற்படி பகுதியில் உள்ள பல கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜெருசலேம் போஸ்ட் தகவலின்படி, இஸ்லாமிக் புரட்சிகர காவல் படையின் (ஐ.ஆர்.ஜி.சி.) கப்பல் தளம் அருகே இந்த வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது. எனினும், இந்தச் சம்பவத்தில் தொடர்பு எதுவும் இல்லை என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை மறுத்துள்ளது. சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொலிகளில், பயங்கர வெடிப்புக்கு பின்பு கரும்புகையானது மேகம் போல மேலெழுவதைக் காண முடிகிறது. மற்றொரு காணொலியில் சேதமடைந்த வாகனங்கள், கட்டடங்களைப் பார்க்க முடிகிறது. இதனிடையே சிலர் காயமடைந்தவர்களுக்கு உதவுவதும், சேதங்களை ஆய்வு செய்வதும் பதிவாகி உள்ளது.


உள்ளூர் பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் கூறுகையில்,

“ஷாஹித் ராஜேய் துறைமுகத்தில் பல கன்டெய்னர்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் இந்த வெடி விபத்துச் சம்பவம் நடந்துள்ளது. காயம் அடைந்தவர்களை வெளியேற்றி சிகிச்சைக்கு அனுப்பும் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. உள்ளூர் அதிகாரிகள் விபத்து நடந்த இடத்தில் இருந்து அனைவரையும் வெளியேற்றி வரும் நிலையில், மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

இந்த பயங்கர வெடிப்புச் சம்பவத்தில் இதுவரை 281 பேர் காயமடைந்துள்ளனர் என ஈரானின் அதிகாரபூர்வ ஊடகச் செய்தியில் முதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர், இந்தச் சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.” என்றனர்.

ஷாகித் ராஜேய் துறைமுகம் என்பது எண்ணெய் மற்றும் பெட்ரோகெமிக்கல்களை கையாளும் வசதிகள் கொண்ட, மிகப் பெரிய கன்டெய்னர் போக்குவரத்துக்கான முக்கிய கேந்திரமாகும் என்பது கவனிக்கத்தக்கது.

அமெரிக்காவின் சிறப்புத் தூதர் ,ஸ்டீவ் விட்காஃப், ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி ஆகியோர் இடையே ஓமனில் அணுசக்தி பேச்சுவார்த்தை நடந்து வரும்நிலையில், இந்த வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பொருளாதார தடைக்களுக்கான நிவாரணங்களுக்காக ஈரானின் அணுசக்தி திட்டங்களைக் குறைப்பதே இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கம்.













# பஹல்காம் தீவிரவாதிகளை தேடும் பணியில் இந்தியாவுக்கு உறுதுணை: அமெரிக்கா உறுதி



ஜம்மு – காஷ்மீரின் பஹல்காமில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளை தேடும் பணியில் இந்தியாவுக்கு அமெரிக்கா தனது ஆதரவை அளிக்கும் என அமெரிக்க உளவுத் துறை தலைவர் துளசி கப்பார்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர்,

"பஹல்காமில் 26 இந்துக்களை குறிவைத்து கொன்ற கொடூரமான பயங்கரவாத தாக்குதலை அடுத்து, இந்தியாவுடன் நாங்கள் ஒற்றுமையுடன் நிற்கிறோம். அன்புக்குரியவரை இழந்தவர்களுக்கும், பிரதமர் மோடிக்கும், இந்திய மக்கள் அனைவருக்கும் எனது பிரார்த்தனைகளும் ஆழ்ந்த அனுதாபங்களும். இந்த கொடூரமான தாக்குதலுக்கு காரணமானவர்களை நீங்கள் வேட்டையாடும்போது நாங்கள் உங்களுடன் இருக்கிறோம், உங்களுக்கு ஆதரவளிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிஹாரில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் மோடி,

"தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள், சதித் திட்டம் தீட்டியவர்கள் மிகக் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும். பயங்கரவாதத்தை வேரறுக்கும் காலம் வந்துவிட்டது. 140 கோடி இந்தியர்களின் மனவலிமையை யாராலும் உடைக்க முடியாது.

பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகள் அடையாளம் காணப்படுவார்கள். அவர்களை தேடிக் கண்டுபிடித்து தண்டனை வழங்குவோம். எந்தவொரு பயங்கரவாதியும் தப்ப முடியாது. பூமியின் கடைசிவரை அவர்களை துரத்துவோம். பயங்கரவாதிகளிடம் மீதமிருக்கும் நிலத்தையும் அழிக்கும் நேரம் வந்துவிட்டது. நீதி நிலைநாட்டப்படும்" என்று தெரிவித்திருந்தார்.

# நடுநிலையான விசாரணைக்கு தயார் என்கிறது பாகிஸ்தான்



ஜம்மு, காஷ்மீரில் 26 பேர் கொல்லப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் குறித்து, நடுநிலையான விசாரணைக்குத் தாம் தயாராக உள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு இது தொடர்பில் உரையாற்றியிருந்தார்.

சமீபத்தில் பஹல்காமில் நடந்த துயரச் சம்பவம், பழி சுமத்தும் மற்றொரு உதாரணமாகும். இவ்வாறான விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டும் என ஷெபாஸ் ஷெரீஃப் கூறினார்.

எந்தவொரு நடுநிலையான, வெளிப்படையான, நம்பகமான விசாரணைகளிலும் பங்கேற்க பாகிஸ்தான் தயாராக உள்ளது என்றும் அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச விசாரணையாளர்களால் நடத்தப்படும் எந்தவொரு விசாரணைக்கும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜ் முகம்மது ஆசிஃப் கூறியதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# இது பொய்யால் உருவான அரசு என்பதை உணர்ந்துள்ள மக்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



"தமது கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெறமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தானே தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளார். இது பொய் கூறும் அரசு அல்ல, பொய்யால் உருவான அரசு என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தற்போது பிராந்திய ஸ்திரத்திரத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான நிலைவரங்கள் அயல்நாடுகளில் நிலவுகின்றன. எனவே, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் தற்போதைய நிலைமையைப் பொறுமையாகவும் அமைதியாகவும் கையாள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் யுத்த நிலைமையே காணப்படுகின்றது.

ஒருபுறம் இஸ்ரேல் – பலஸ்தீன் மோதல் இடம்பெற்று வரும் நிலையில், மறுபுறம் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் பொருளாதாரப் போர் ஆரம்பித்திருக்கின்றது.

எனவே, ஆசிய பிராந்தியத்தை அமைதியாகப் பேண வேண்டியது சகல ஆசிய நாடுகளினதும் பொறுப்பாகும். அந்த வகையில் இவ்விரு நாடுகளும் அமைதியாகச் செயற்படுவதே முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசும் சர்வதேச நிலைமைகள் குறித்த புரிதலுடன் செயற்பட வேண்டும். தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன.

தமது கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெறமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தானே தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளார். இது பொய் கூறும் அரசு அல்ல, பொய்யால் உருவான அரசு என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

தலதா வழிபாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதிலும், அரசால் அதற்கான முறையான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. சனநெரிசலைக் கட்டுப்படுத்த முடியாது போயுள்ளது.

இதன் காரணமாகவே ஜனாதிபதி மீண்டும் அங்கு சென்றிருக்கின்றார். அரசின் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த ஆட்சியாளர்கள் தலதா வழிபாட்டுக்குச் செல்லும்போது ஊடகங்களையும் அழைத்துச் செல்வதாக அன்று ஜே.வி.பி. விமர்சித்தது. ஆனால், இன்று அவர்களும் அதையே செய்கின்றனர்." – என்றார்.

# அதிகளவான சபைகளை 'மொட்டு' கைப்பற்றுமாம்

## இப்படிக் கூறுகின்றார் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர்




"நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அதிகளவான உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளை நாங்கள் கைப்பற்றுவோம்." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன அந்தக் காலப்பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல்களில் மேடை ஏறி தனது கட்சியைப் பிரபல்யப்படுத்தவில்லை. பதவிக்கான கௌரவத்துடன் செயற்பட்டார். அதேபோல் 2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அதே ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தல் பிரச்சார மேடைகளில் ஏறவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரச்சார மேடைகளில் ஏறி தொடர்ந்து பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார். கட்சிக்காகப் பிரச்சாரம் செய்வதை முன்னிலைப்படுத்திக் கொண்டு அவர் செயற்படுகின்றார். அரச தலைவருக்கான பொறுப்புக்களை மறந்துவிட்டு அவர் செயற்படுகின்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைக் காட்டிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ முன்னிலையில் உள்ளார். நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிகளவான உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளை நாங்கள் கைப்பற்றுவோம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய் என்பதை மக்கள் நன்கு விளங்கிக்கொண்டுள்ளார்கள். ஆகவே, போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டமைக்கு மக்கள் இந்த அரசுக்குத் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்." – என்றார்.



# சொந்த காணிகள் இருந்தும் அதன் பயனை பெறமுடியாது தவிக்கிறோம்

## வட்டுவாகல் மக்களின் ஆதங்கம்

(பா.சதீசன்)

வட்டுவாகல் கோட்டாபாய கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட மக்களுடைய காணிகளின் விடுவிப்பு தொடர்பாக வட்டுவாகல் கிராம மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் இணைந்து உதய சூரியன் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமான இந்த கலந்துரையாடலில் வட்டுவாகல் கோட்டபாய கடற்படையினரால் மக்களுடைய 617 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாது இருப்பது தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடப் பட்டிருந்தன.

இந்த கலந்துரையாடலில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் இணைப்பாளர் மதுஷனா, குறித்த நிறுவனத்தின் பணியாளர்கள், வட்டுவாகல் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் சங்கத்தினர், சனசமூக நிலையத்தினர், மீனவ சங்கத்தினர், கமக்கார அமைப்பினர், காணிகளை இழந்த மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போது,

“தென்னை, பனைவளம், வயல் நிலங்கள், முந்திரிகை இருந்தும் அதன் பயனை பெற முடியாதளவில் இருக்கின்றோம். எங்களுடைய மூதாதையர்களுடைய சொத்தினை நாங்கள் பார்க்காமல் போய்விடுவோமோ என்ற பயம் எங்களுக்குள்ளே இருக்கின்றது. கடற்படையினர் தமது சொந்த நிலம் போல் அப்பகுதியின் அருகாலே செல்ல முடியாத நிலை இருக்கிறது. காணிகளை இழந்த மக்கள் மறுகரையில் அயலவர்களது காணிகளிலும், உறவினர்களது காணிகளிலும் குடியிருக்கிறார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அரிசி , தேங்காய், கஜு உற்பத்திகள் போன்ற வாழ்வாதாரத்தை நம்பி வாழ்ந்த மக்கள் நிலத்தை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் இந்த மக்களின் பொருளாதாரம் ஒருபடி மேலுயர்ந்திருக்கும் . காணிகள் விடுவிக்கப்படுமா என்ற கவலையில் இன்றுவரையிலும் இருக்கின்றார்கள்.

காணிகள் கிடைத்து அங்கு சென்று வாழ்ந்து விடலாம் என்ற ஆசைகளுடன் வாழ்ந்தவர்கள் ஆசைகள் நிறைவேறாமலே சிலர் உயிரை மாய்த்திருக்கின்றார்கள். மாற்று காணிகள் எவையும் எமக்கு தேவையில்லை. எமது சொந்த நிலமே எமக்கு தேவை. எமக்குரிய வயல் நிலங்களில் கடற்படையினர் துப்பரவு செய்து மூன்று ஆண்டுகளாக வயல் விதைத்து வருகின்றார்கள். ஆனால் வயல் விதைப்பதற்கான சான்றுகள் அதாவது வயல் நிலங்களிற்கான பணம் எடுப்பதற்கான ஆதாரம் எம்மிடம் இருக்கின்றது.

மூன்று சந்ததிகளை கடந்து வந்திருக்கின்றோம். அவர்களுக்கும் இந் நிலம் கிட்டுமோ என்று தெரியாத நிலை இருக்கிறது. கடல்வளம், விவசாயம், கால்நடைகளை நம்பி வாழ்கின்றோம். தற்போது அரசாங்கம் மாறியிருக்கின்ற இந்த காலத்திலாவது உண்மையான, நேர்மையான , நியாயமான தீர்வுடன் இந்த காணிகளை எங்களுக்கு விடுவிக்க ஜனாதிபதி ஆவன செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.” என தெரிவித்தனர்.





# ரயிலில் மோதி குடும்பஸ்தர் சாவு!

நுவரெலியா – பட்டிபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பேவல பகுதியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பதுளை, ஹப்புத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் கண்டியில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நுவரெலியா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பட்டிபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள்களுடன் மேலும் 277 பேர் மாட்டினர்!

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருள்களுடன் மேலும் 277 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 86 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 112 பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 73 பேரும், கஞ்சா செடிகளுடன் 6 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, 61 கிராம் 161 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 744 கிராம் 377 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 1 கிலோ 507 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 2 இலட்சத்து 57 ஆயிரத்து 991 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.








## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# மருத்துப் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவிகளை நேரில் சென்று வாழ்த்திய ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரீட்சையில் மருத்துவப் பிரிவில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி மாணவிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நேரில் சென்று வாழ்த்தினார்.

அந்தவகையில் மருத்துவப் பிரிவில் முதலிடத்தைப் பெற்ற மாணவி விக்னேஸ்வரன் நர்த்திகா, இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவி சிவபாதம் மதுவிழி, மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவி கிருபாகரன் அர்ச்சயா ஆகியோரின் வீடுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு நேரில் சென்று மேற்படி மாணவிகளுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



# ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கை மே மாதம் ஆரம்பம்

## பிரதமர் ஹரிணி தகவல்



புதிய கல்வி சீர்த்திருத்திற்கமைய ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப் படுமென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் மீரிகம, மினுவங்கொட மற்றும் கட்டான ஆகிய பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

சிறுவர்களின் ஆரம்ப கல்வி முக்கியமாக இருந்தாலும் அதற்குரிய முறைமையொன்று இல்லையென பிரதமர் சுட்டிக்காட்டினார்.

தற்போது இதற்கான முறைமையொன்று தயாரிக்கப் படுவதாகவும் மே மாதத்திலிருந்து புதிய பாடத்திட்டத்திற்கான ஆசிரியர் மட்ட பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் கூறினார்.

# டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள் அதிகரிப்பு



இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டசுகாதாரஊழியர்களின்எண்ணிக்கை 166 ஆக அதிகரித்துள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்,

இதனால் வைத்தியசாலை நடவடிக்கைகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்தில் 1,465 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 14,600 ஆக அதிகரித்துள்ளது.



# கந்தப்பளையில் மின்சாரம் தாக்கி வயோதிபர் ஒருவர் பரிதாப மரணம்

நுவரெலியா, கந்தப்பளை புதிய வீதி பகுதியில் மரக்கறித் தோட்டத்தில் மின்சார வேலியில் சிக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கந்தப்பளை, புதிய வீதி பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே மேற்படி வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

அவர் வழமை போன்று தனது வீட்டில் இருந்து தோட்டத்துக்குச் சென்றுள்ளார்.

தோட்டத்துக்குச் சென்ற வயோதிபர் மீண்டும் வராததால் அவரது உறவினர்கள் அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது தோட்டத்தில் வயோதிபர் சடலமாகக் கிடப்பதை அவதானித்த உறவினர்கள், இது தொடர்பில் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்கு வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் சடலமானது பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கந்தப்பளை பொலிஸாரும், நுவரெலியா தடயவியல் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

# தேர்தல் சட்டத்தை மீறிய 28 வேட்பாளர்கள் கைது!

## பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிப்பு




உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 28 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி) 330 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 259 முறைப்பாடுகளும், தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 71 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில், தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 28 வேட்பாளர்களும், 111 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காகச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட 26 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**



**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

7



யாழ்ப்பாணத்தில் சிங்க மாப்பாணர் தம்பதிகளுடன் லயனல் போபகே தம்பதியினர்.

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

1982 ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் நடந்த கட்சிக் கூட்டங்களிலும் சம்மேளனங்களிலும் லயனல் போபகேயும் அவரது ஆதரவாளர்களும் பரந்த, தாராளமான நோக்கில் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழக் கோரிக்கைக்கு தாங்கள் ஆதரவு தரவில்லை என்பதையும் ஆயுதம் தாங்கிய தமிழ்ப் போராளிகளின் கொள்கைகளை பொதுவாக ஏற்றுக் கொள்ளாது நிராகரிக்கின்றனர் என்பதையும் தெளிவுபடுத்தினர். அவர்களைப் பொறுத்தவரை கூட தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு முதலாளி வர்க்கக் கட்சி, சிங்கள முதலாளி வர்க்கத்தினருடனேயே இணைந்து போக விரும்பும் என்றும், தங்களது அரசியல் ஆதாயத்திற்காகவும் நாடாளுமன்றக் கதிரைகளுக்காகவும் பிரிவினை வாதங்களை தூண்டி விடுகின்றது என்ற அபிப்பிராயத்தையும் வெளிப்படையாகத் தெரிவித்தனர். பெரும்பான்மையினத் தரப்புகளின் கட்சிகளுக்குள் இருக்கும் முதலாளித்துவத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் வித்தியாசங்கள் இல்லை என்பது அவர்களது வாதம்.

போபகே தமிழ் இளைஞர் குழுக்களில் பல முற்போக்குச் சிந்தனையுள்ள இளைஞர்கள் இருக்கின்றனர் எனவும், அவர்கள் தமிழ் சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட, மத்திய தர வர்க்கத்திலிருந்து புறப்பட்டவர்களாதலால் முதலில் அவர்களைப் பிரிவினைவாதம் பேசும் கூட்டணி மற்றும் அதே சமயம் ஆயுதம் தாங்கிய குழுக்களிடமும் இருந்து பிரித்து, அவர்களைக் காப்பாற்றும் அதேவேளை அந்த இளைஞர்களையும் தங்களது முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் இணைப்பது அவசியம் என வலியுறுத்தினார்.

சோமவன்ஸ அமரசிங்க, உபதிஸ்ஸ கமநாயக்க, பியதாஸ, விஜநாயக்க, வனசிங்க போன்ற கடும்போக்கு வாதிகள் இவற்றை எதிர்த்தனர்.

அவர்களைப் பொறுத்தவரை லயனல் போபகே குழுவின் தாராள சிந்தனையைக் கட்சி ஏற்றுக் கொள்ளாது என்றும், வடக்குக் கிழக்கின் பெரும்பான்மைத்

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி ▲

தமிழ்க் கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கோ அதிகார பரவலுக்கோ இடமளிக்க முடியாது என்றும் நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டது.

1977 ஆம் ஆண்டின் பொதுக்குழுத் தீர்மானத்திற்கு மாற்றங்கள் தேவையில்லை, ஆனால் அதன் நடைமுறையாக்கத்தில் கட்சியின் வளர்ச்சிக்கு எது சாதகமானதோ அதனை வளரும் அரசியல் சூழ்நிலைகளில் கடைப்பிடிக்கலாம் எனக் கருதப்பட்டது.

அந்த நாள்களில் கட்சியில் சோமவன்ஸ அமரசிங்க முக்கியமானவராகக் கருதப்பட்டார். ஜே.வி.பி. அங்கத்தினர்கள் சிறையில் இருந்து வெளிவந்து, கட்சியைப் பதிந்து, அரசியல் பாதையில் புறப்பட்டாலும் கட்சிக்கென வங்கிக் கணக்கொன்றை திறக்க முடியவில்லை. வங்கிகள் பல சாக்குப் போக்குகளை இவர்களது பின்னணிகள் காரணமாகத் தந்து கொண்டிருந்தன. அங்கத்தினர்களோ கூட்டங்களில் உண்டியல் குலுக்கி, கட்சிக்குப் பணம் சேகரித்ததில், கணிசமான தொகைகள் சேர்ந்தன. அவற்றை எப்படி வைப்பில் இடுவது என்று தலையைச் சொறிந்தபோது தான் சோமவன்ஸ அமரசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

சோமவன்ஸ அமரசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரான சிறிசேன கூரேயின் சகோதரியை மணம் முடித்து இருந்தமையால் அந்த உறவு முறையில் அரசுடன் அவர் மூலம் சில அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற கணிப்பில், வங்கிக்கணக்கு பின்னாளில் திறக்கப்படும் வரை பணம் அவருடனே இருந்தது. அவர் அதனை மனைவியிடம் ஒப்படைக்க, அதனை சிறிசேன கூரேயிடம் தனது தனிப்பட்ட பணம், அதனைப் பாதுகாத்து தருமாறு கேட்டுக் கொடுக்கப்பட்டதாக அங்கத்தினர்களிடையே தகவல் பரிமாற்றங்கள் இருந்தன.

விஜயவீரவுக்கு பக்கபலமாக இருந்த கடும்போக்குவாதிகள் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்மானங்களை கணக்கெடுக்காது, அவற்றைத் தவிர்த்து, தாங்கள் கூட்டங்களில் தெரிவிப்பவை போதும் என்று கட்சியை முன்னேற்ற விரும்பியதற்காக, தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையின் அங்கீகரிப்பை வெளிப்படையாக கொள்கை திட்டத்திலும் சேர்த்துப் பிரசாரமும் செய்தால் அது தீவிரவாத பெரும்பான்மை கட்சிகளுக்குப் பிரிவினையை ஆதரிப்பதாக தீனி போடும் என்ற அங்கலாய்ப்பை முன் வைத்தனர்.

பெரும்பான்மைக் கட்சிகள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள வாக்காளர் மத்தியில் இனவாதத்தை தூவி அறுவடை செய்யும் போது, கொள்கை அளவில் தாங்கள் சரியாக இருந்தாலும், வாக்காளர் மத்தியில் அது அடக்கியே வாசிக்கப்பட வேண்டும் என்பதால்தான் 1977 ஆம் ஆண்டின் பிரகடனம் அப்படி அமைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. முன்னைய பதிவில் குறிப்பிட்டபடி –

# அதிகாரங்கள் எதேச்சாரமாக மையப்படுத்துவதும், நாடு பிரிக்கப்படுவதும் எதிர்க்கப்படும்.

# நாட்டின் இறையாண்மை நாட்டிலுள்ள எல்லா சிறுபான்மையினரும் உண்மையான சமத்துவ அடிப்படையில் தங்களைத் தாங்களே ஆளும் உரிமையை கொண்டிருப்பதிலேயே பாதுகாக்க முடியும்.



கைதாகி கைவிலங்குடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படும் றோஹண விஜவீரவும், தோழர் லயனல் போபகேயும்.

அந்தக் காலகட்டத்தில் ஜே.ஆர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அரசியல் சட்ட த்தை மாற்றி, திட்டங்கள் வகுத்து, தனக்குக் கிடைக்கும் அதிகாரங்களில் ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர எதுவும் செய்ய முடியும், நாட்டின் சுபீட்சத்துக்குத் தான் எடுக்க முடிவுகளே அமுலுக்கு வரும் எனவும் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார். விஜயவீர பகுதியினர் அந்த சர்வாதிகாரப் போக்கை வன்மையாக எதிர்த்தனர். அதேசமயம் சமத்துவ அடிப்படையில் மட்டுமே தங்களைத் தாங்களே ஆளும் உரிமையை மத்திய குழு ஏற்றுக்கொண்டது என்ற புதிய வியாக்கியானங்களைத் தரத் தொடங்கினர். சரியான புரிதலுக்காக அந்த வரிகளை ஆங்கில வாசகத்தில் அப்படியே தருகிறேன்.

# Autocratic centralization as well as the division of the country will be opposed.

# The defence and maintenance of the territorial integrity of the country will be based on the true egalitarianism and autonomous rules by the various minorities.

1982 இன் தேர்தல் வாக்கு விகிதாசாரம் தமிழ் மக்களிடையே திருப்தியாக இல்லாமல் இருந்தாலும், சிங்கள வாக்காளர் இடையே பெருமளவில் காலூன்ற வேண்டிய தேவைகள் இருப்பதாலும்,

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

1977 ஆம் ஆண்டின் பொதுக் குழுத் தீர்மானத்தை மாற்றி விடுவதில் சோமவன்ஸ அமரசிங்கவின் தரப்பினர் குறியாக இருந்தனர். அந்தக் கால கட்டங்களில் தமிழ் அரசியல் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களையோ தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட முஸ்தீபுகளையோ கண்டு கொள்ளாமல் விலத்தி நின்று மௌனம் சாதித்தனர். இளைஞர்களை நசுக்குவதற்காக தமிழ்ப் பகுதிகளில் அரச படையினர் யாழ்ப்பாணத்தை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அராஜகம் புரிந்த போது – அங்குள்ள மக்களின் மனித உரிமைகள் சீரழிக்கப்படக்கூடாது என மனித உரிமை ஆவலர்கள் பலர் மகஜர் அனுப்பிய போது – கட்சி அதில் ஒப்புக்காகக் கையெழுத்து வைத்தது. ஆனாலும் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களுக்கு எதிரான அரச வன்முறைகளையோ, அவை பொதுமக்களுக்கும் பரந்த பாதிப்பைத் தந்தமையையோ கண்டு கொள்ளவில்லை.

1979 ஆம் ஆண்டு ஜே.ஆர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பிறப்பித்து, அவரது மருமகன் பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கவை பயங்கரவாதத்தை அடக்குமாறு வடக்குக்கு அனுப்பி இருந்தார்.

நவம்பர் 1982 இல் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் இராணுவம் ஆறு கத்தோலிக்க குருமாறையும் ஒரு அங்கிலிக்கன் பாதிரியாரையும், மெதடிஸ்ட குருவையும் கைது செய்திருந்தது. அதேசமயம் பல்கலைக்கழக விரிவுரையாளர் நித்தியானந்தன், அவரது மனைவி நிர்மலாவும் கூட கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பில் வைக்கப்பட்டனர். இந்த கைதுகளை எதிர்த்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் 16 டிசம்பர் 1982 வவுனியாவில் புனித அந்தோணியார் தேவாலயத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்திய போது, இராணுவமும் பொலிஸும் அதில் புகுந்து,



கன்னியாஸ்திரியாக சித்திரா.

பொதுமக்களைத் தாக்கிப் பலரையும் கைது செய்தன. இப்படியான அநீதிகள் சிங்கள மக்களுக்கிடையே விரிவாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணங்களிலும், கட்சியும் மனித உரிமைகள் பேணுவதற்கான அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கருதியும் போபகே மனித உரிமை ஆர்வலரான சுனிலா அபயசேகவுடன் (Movement For Inter Racial Justice - MIRJE), வண. ஷேர்லி பெர்னாண்டோவைச் சந்திக்க சென்ற வேளையில் தான் தனது பின்னாள் மனைவியை கட்டுக்குருந்த கன்னியாஸ்திரி மடத்தில் சந்தித்தார். முற்போக்கு



போபகேயின் திருமணத்தின் போது.....

கொள்கைகளாலும், பாமர வறிய மக்களிடையே இறங்கி அவர்களின் மேம்பாட்டுக்காக உழைத்தமையால் கன்னியாஸ்திரி சித்ராவை மனித உரிமை ஆர்வலரான சுனிலா தெரிந்திருந்து, அவரை ஜே.வி.பியின் அனுசரணையில் அமையவிருக்கும் மனித உரிமை அமைப்பில் பங்குபற்றுவது பற்றி பேசவே அந்தச் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. லயனல் போபகே அப்பொழுது மனித உரிமை மையம் (Civil Rights Movement) என்ற தேசிய அமைப்புகளின் ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தார்.

சித்ரா இனிய குரல் வளம் கொண்டவர். அதனால் கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் 'விடுதலைக் கீதங்கள்' பாடிய குழுவினருடன் இணைந்து பாடல்கள் இசைத்து, ஜே.வி.பியின் சமுதாய மாற்றத்திற்கான கருத்துக்களினால் மட்டுமல்லாது, லயனல் போபகேயாலும் கவரப்பட்டிருந்தார்.

கன்னியாஸ்திரியாக இருந்த நிலையில், அதனைத் தியாகம் செய்து வெளியேறுவதா என 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இருதலைக் கொள்ளி எறும்பாகத் துடித்து பின்னர், வண. பிதா திஸ்ஸ பாலசூரிய, மைக்கல் றொட்ரிகோ அவர்களின் புத்திமதிகளோடு கன்னியாஸ்திரி மடத்தில் இருந்து ஜுலை 1981இல் வெளியேறி, லயனல் போபகேயுடன் எளிமையான திருமண பந்தத்தில் இணைந்தார். போபகேயின் கட்சி தோழர்கள் சிலர் – விஜயவீர உட்பட – சமுகமளித்திருந்து, திருமண சாட்சி பத்திரத்தில் ஜே.வி.பி. அங்கத்தினரான சுன்னாகத்தைச் சேர்ந்த சிங்கமாப்பாணரும் விஜயவீரவும் சாட்சிகளாகக் கையெழுத்திட்டனர். குடும்பங்கள் இல்லாது, ஆடம்பரங்கள் ஏதுமின்றி நடந்த இந்தத் திருமணத்தில் அங்கத்தினர் ஒருவர் பக்கத்தில் இருந்த கடையில் வாங்கி வந்த கட்டுச் சோற்றை பகிர்ந்து உண்டார்கள். இந்த திருமணமும் அடிப்படை அங்கத்தினரிடையே ஆதங்கங்களை ஏற்படுத்தியது.

(தொடரும்)



# தமிழ் மக்களை மந்தைகளாக அணுகும் அநுர அரசாங்கம்!



புருஜோத்தமன் தங்கமயில்

"...நாட்டில் இருந்து துப்பாக்கிக் கலாசாரத்தை அழித்து ஒழிப்பதற்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்.." என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். 'சமூக ஆர்வலர்' என்று தென் இலங்கை ஊடகங்களினால் விளிக்கப்படும் மொட்டுக் கட்சியின் உறுப்பினரான டொன் பிரியசாத் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த பரபரப்புக்களுக்கு மத்தியில், அடுத்த நாள் தேர்தல் ஊடகங்களிடம் பேசும் போதே அந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். நாட்டு மக்கள் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியை வெற்றிபெற வைத்திருக்கிறார்கள். அதிலும், பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ள வெற்றியை அந்தக் கட்சிக்கு அளித்திருக்கிறார்கள். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி தலைமையில் கிட்டத்தட்ட ஏக அதிகாரமுள்ள அரசாங்கத்தை தேசிய மக்கள் சக்தி அமைத்திருக்கின்றது. ஆனால், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், நாட்டில் இடம்பெறும் துப்பாக்கி வன்முறைக் கலாசாரத்தை ஒழிப்பதற்கு உள்ளூராட்சி சபைகளிலும் தங்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று கோருவதை எப்படி நோக்குவது?

முழுமையாக நிர்வாக நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கிற அரசாங்கத்தின் பிரதிநிதிகள், நாட்டு மக்களை, குறிப்பாக தமிழ் மக்களை மந்தைகள் எனும் நினைப்பில் கருத்துக்களை வெளியிடுவது அபத்தத்தின் உச்சமாகும். உள்ளூராட்சி சபைகள்தான் தேர்தல் முறையில் தேர்தெடுக்கப்படும் கீழ்நிலையில் உள்ள அலகு. அந்த அலகின் அதிகார எல்லை என்பது, பல தருணங்களில் பிரதேச செயலகங்களை விடக் குறைவானது. கிராமங்கள், நகரங்களின் பராமரிப்பு, அழகுபடுத்தல், ஒழுங்கைகளுக்கு மின்விளக்குகளை மாட்டுதல் உள்ளிட்ட விடயங்களில்தான், அவற்றின் அதிகார எல்லை. அப்படியிருக்க, தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு விடயத்துக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தேசிய மக்கள் சக்தியினர் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அதிர்ச்சியளித்தன. குறிப்பாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியும், 'ஊசி' சுயேச்சையும் மொத்தமுள்ள ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான்கை வெற்றி கொண்டன. இதனை, தேசிய மக்கள் சக்தியினரும் ஊசி மருத்துவரும் தமிழ்த் தேசியக் கட்சிகளை அரங்கில் இருந்து அகற்றுவதற்கான ஆணையை மக்கள் வழங்கிவிட்டனர் என எடுத்துக் கொண்டு விட்டார்கள். பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகரன் தொடங்கி இளம் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வரையில், தமிழ் மக்களின் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற பிரதான கட்சி தேசிய மக்கள் சக்தி என்று அறிவித்தல் விடுக்கிறார்கள். இனி தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று எதுவும் இருக்காது. தேசிய மக்கள் சக்திதான் தமிழ் மக்களின் தமிழ்க் கட்சி என்ற தோரணையில் அவர்கள் தொடர்ச்சியாக பேசுகிறார்கள். இந்தப் பேச்சு, தேர்தல் அரசியல் கணக்கில் பேசப்படுவது என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால், தென் இலங்கையின் கடந்த கால அரசாங்கங்கள், குறிப்பாக ராஜபக்ஷ அரசாங்கம் நிகழ்த்திய எதேச்சதிகார போக்கினை தேசிய

தொடர்ச்சி ▼





# தமிழ் மக்களை மந்தைகளாக அணுகும் அநுர அரசாங்கம்!

தொடர்ச்சி ▲

மக்கள் சக்தி அரசாங்கமும் நிகழ்த்துகின்றதுதான் பெரும் உறுத்தலாகும்.

இராமலிங்கம் சந்திரசேகரனின் ஆதரவாளர்கள், முல்லைத்தீவு கேப்பாப்புலவு மீனவ சங்கப் பிரதிநிதியை கடந்த வெள்ளிக்கிழமை தாக்கினார்கள். அது தொடர்பில், ஊடகங்கள் கேள்வி எழுப்பினால், “..அதைவிடுங்கள். வேறு கேள்விகளைக் கேளுங்கள்..” என்று அதிகார மமதையில் சந்திரசேகரன் பதிலளிக்கிறார். இன்னொரு பக்கம், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் விதிமுறைகளை மீறி உதவித் திட்டங்களைப் புரிவதாகக் கூறிக் கொண்டு விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்களை வழங்குகிறார்கள். வழக்கமாக தேர்தல் வரப்போகின்றது என்று தெரிந்தவுடன், விளையாட்டுக் கழகங்கள், சன சமூக நிலையங்களை அணுகி அரசியல்வாதிகள், வாக்குத் திரட்டுவதற்காக சிறிய உதவிகளை வழங்குவது வழக்கம். ஆனால், தேர்தல் சட்டங்கள் நடைமுறையில் இருக்கும் போது, இவ்வாறான விடயங்களை அரசியல்வாதிகள் தவிர்த்துவிடுவார்கள். ஆனால், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், தேர்தல் சட்டங்களை மீறி சிறிய உதவிகளை வழங்குவதைப் படம் எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்கிறார்கள். அது தொடர்பில் தேர்தல் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. இதில், ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையில் நின்று ஆட்சி புரிகின்றோம் என்று தேர்தல் பிரசாரங்களில் அரசாங்கத்தினர் முழங்குகிறார்கள்.

உகண்டாவில் மறைத்து வைக்கப்பட்ட ராஜபக்ஷக்களின் பணத்தினை மீட்போம், ரணில் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட சாராயக் கடை அனுமதிப் பத்திர முறைகேட்டினை வெளிப்படுத்துவோம் என்று தொடங்கி ஆயிரம் தேர்தல் கால வாக்குறுதிகளை அநுர குமார திஸநாயக்க தொடங்கி தேசிய மக்கள் சக்தியின் அனைத்துத் தலைவர்களும் வழங்கினார்கள். ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களாகிறது. ஆனால், கடந்த கால ஊழல் அரசாங்கங்களின் நீட்சி மாதிரியான செயற்பாடுகளையே அவர்கள் முன்னெடுக்கிறார்கள். சாராயக்கடை அனுமதிப்பத்திர விவகாரத்தில், மாவட்டம் தோறும் எத்தனை கடைகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட்டு, அமைதியாகிவிட்டார்கள். ரணில் – ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆதரவளிப்பதற்காகவே, அந்த சாராயக் கடை அனுமதிப்பத்திரங்களை, கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெற்றார்கள். அவர்களை வெளிப்படுத்துவதுதான் உண்மையிலேயே, சாராயக்கடை அனுமதிப்பத்திர விடயங்களை வெளிப்படுத்துவதாகக் கொள்ள முடியும். மற்றப்படி மாவட்டங்கள் தோறும் எத்தனை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக யாரும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், அதனை ஊழலுக்கு எதிரானவர்கள் என்று சொல்லும் தேசிய மக்கள் சக்தியினர் எதற்காகத் தவிர்த்தார்கள்? அவர்கள் யாரைக் காப்பாற்றுவதற்காக இந்த நடவடிக்கைகளில் இறங்கினார்கள்? இது, எந்தப் பெருமுதலாளிக்கான விசுவாசம்? அதுபோல, ரணில் – ராஜபக்ஷ ஆட்சியின் தொடர்ச்சியைக் குலைக்காமல் வைத்துக் கொள்வதற்கான கையூட்டா? என்று தொக்கி நிற்கும் கேள்விகள் தவிர்க்க முடியாதவை.

இன்னொரு பக்கம், தமிழ் மக்கள் சின்னச் சின்ன விடயங்களுக்கு எல்லாமும் இனவாதம் பேசுவதாக

தொடர்ச்சி ▼

# தமிழ் மக்களை மந்தைகளாக அணுகும் அநுர அரசாங்கம்!


தொடர்ச்சி▲

பிமல் ரத்நாயக்க கூறுகிறார். ஆனையிறவு உப்பிற்கு 'ரஜ லுணு' என்று அரசாங்கம் பெயர் சூட்டிச் சந்தைக்கு விட்டால், அது தொடர்பில் கேள்வி கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டால், அது தமிழ் இனவாதம். தையிட்டியில் தனியார் காணிகளில் அத்துமீறி ஆக்கிரமித்து கட்டப்பட்ட விகாரையை அகற்றக் கோரினால், அது தமிழ் இனவாதம். இப்படியெல்லாம், தேசிய மக்கள் சக்தியின் பிமல் ரத்நாயக்க தமிழ் மக்களை நோக்கி அரசியல் வகுப்பு எடுக்கிறார். அதனை எதுவும் எதிர்க் கேள்வி கேட்காமல் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இல்லையென்றால், தமிழ்க் கட்சியை நோக்கியும் ஊழல் விசாரணைகளை முன்னெடுத்து அடக்கி ஒடுக்குவோம் என்கிற அகங்கார தொனியை அவர் வெளிப்படுத்துகிறார். ஊழலுக்கு எதிரான நடவடிக்கை சிங்கள், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் பார்த்து எடுக்கப்பட வேண்டியவை அல்ல. ஊழலை யார் புரிந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அந்த ஊழல்களினால் நாட்டு மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட துரோகங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதனைவிட்டு, வாக்கு அரசியல் நலனை மாத்திரம் கருத்தில் கொண்டு, ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை எடுப்பது என்பது தென் இலங்கையின் கடந்த கால அரசாங்கங்களின் வழக்கமான நடவடிக்கைகளாகும். அதனைத்தான், தங்களுக்கு எதிரான அரசியல் எதிரிகள் என்று கருதும் தரப்புக்களை நோக்கி தேசிய மக்கள் சக்தியும் ஏவ நினைக்கின்றது. தென் இலங்கையில், இந்தப் பூச்சாண்டிப் பேச்சுக்களுக்கு கட்சிகள் பயப்படலாம். ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏன் பயப்பட வேண்டும்? இந்த அச்சுறுத்தலை அவர், சிலவேளை இராணுவத்தின் துணைக்குழுக்களாக இயங்கிய தரப்பினரை நோக்கிச் சொல்லியிருந்தால், அது ஏற்புடையது. ஏனெனில், இராணுவத்தின் துணைக்குழுக்களின் மோசடிகள், அத்துமீறல்கள் தொடர்பில் தேசிய மக்கள் சக்திக்கு தெரிந்த அளவுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தெரிய வாய்ப்பில்லை. ராஜபக்ஷக்களோடு ஆரம்ப கட்டங்களில் இணக்கமாக பயணித்து, நாட்டில் இறுதி மோதல்களை ஆரம்பித்து வைத்து, ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்படவும், காணாமற்போகவும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) வித்திட்டது. அப்போது, அவர்களுக்கு ராஜபக்ஷக்களின் படுகொலைக் கலாசாரம், அதன் பின்னணிகள் தொடர்பில் தெளிவான புரிதலும் விளக்கமும் இருந்திருக்கும். இப்போது, தன்னுடைய அடையாளத்தை தேசிய மக்கள் சக்தியாக மாற்றிக் கொண்ட பின்னர், தங்களின் கடந்த கால கறுப்பு வரலாறுகள் எல்லாமும் மறைந்துவிடும் என்று அவர்கள் நம்புவது அற்பத்தனமானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முதலில், நாட்டின் சட்டம் ஒழுங்கையும் தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். தொடர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நாளும் பொழுதும் நடைபெறுகின்றன. அதில், கடந்த கால ஆட்சியாளர்களின் ஏவல் அம்புகளாக செயற்பட்ட பலரும் கொல்லப்படுகிறார்கள். இது, கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்கான ஆதாரத்தை அழிக்கும் செயல்களாகும். தங்களின் காணிகளில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட விகாரைக்கு எதிராக போராடினால், அவர்களை பல கமராக்களைக் கொண்டு படம் எடுத்து, அச்சுறுத்தல் விடுக்கும் வேலைகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுகிறார்கள். ஆனால், நாடு பூராவும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் வகை தொகையின்றி நடக்கின்றன. இப்படியான கட்டத்தில், நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுக்கு என்ற ஒன்று இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. தேசியப் பாதுகாப்பு என்பது எந்தவொரு நாட்டினதும் அடிப்படை. அதனை முதலில் உறுதிப்படுத்துவதுதான் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் முதற்பணி. அதனை, அநுரவால் செய்ய முடியவில்லை. இன்னமும் ஆயுத வன்முறை என்பது பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றது. தாக்குதல் நடத்திய துப்பாக்கிதாரிகளைக் கைது செய்வது மாத்திரமல்ல அரசாங்கத்தின் பொறுப்பு. தேசியப் புலனாய்வு தொடங்கி பொலிஸ் – இராணுவ புலனாய்வுக் கட்டமைப்புக்கள் என்று பல அரச புலனாய்வுப் பிரிவுகள் உண்டு. அவையெல்லாம், இவ்வாறான ஆயுத வன்முறைதாரிகள், அவர்களை வழிநடத்துபவர்கள் தொடர்பில் எந்தவித அறிவும் அற்றிருக்கின்றனவா? அல்லது, அந்த அமைப்புக்கள் இன்னமும் ராஜபக்ஷக்கள் உள்ளிட்ட கடந்த கால ஆட்சியாளர்களுக்குத்தான் விசுவாசமாக இருக்கின்றனவா என்கிற கேள்விக்கான பதிலை தேசிய மக்கள் சக்தியினர் தேடி அறிந்து கொள்ள வேண்டும். அதனைவிட்டுவிட்டு, உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை தங்களிடம் வழங்கினால், துப்பாக்கிக் கலாசாரத்தை இல்லாதொழிப்போம் என்று பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளை சற்று உற்று நோக்கினாலே, அவர்களின் தடுமாற்றம் புரியும். அரசியல் நரி ரணில் சொன்னது போல, இப்போதுள்ளது 'எல் போர்ட்' அரசாங்கம்தான். சின்னச் சின்ன விடயங்களைக் கையாள்வதிலேயே கோட்டை விடுகிறார்கள். அதனை மறைக்க, இன்னமும் கடந்த காலத்தில் தாங்கள் புரிந்த 'எதிர்க்கட்சி – மேடைப் பேச்சு' அரசியலை செய்கிறார்கள். அந்த அரசியலுக்குள் தமிழ் மக்கள் கடந்த முறை மாட்டிக் கொண்டதுபோல, மீண்டும் மாட்டிக் கொள்ளக் கூடாது. ஏனெனில், வடக்கு – கிழக்கு நோக்கி வரும் தேசிய மக்கள் சக்தியினரின் பேச்சுக்கள் மக்களை மக்களாக கருதாமல், மந்தைகள் என்ற கோணத்தில் இருந்து வெளிப்படுத்தப்படுகின்றன. இவற்றை அவதானித்து தமிழ் மக்கள் தங்களின் அரசியல் முடிவுகளை எடுத்தாக வேண்டும். இல்லையென்றால், தமிழர் அரசியல் அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாகிவிடும். ■

# சங்குக் கூட்டின் தேர்தல் விஞ்ஞாபனம்



தமிழர் பிரதேசத்தில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது. அதன் விவரம் வருமாறு:–

ஈழத் தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு காணப்படும் வரை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது அவசிய, அவசரத் தேவையாகும்.

இதன் அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதனை சட்டரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் உறுதியானதொரு கட்டமைப்பாக உருவாக்குவதன் மூலமே கூட்டமைப்பிற்குள் ஜனநாயக நடைமுறைகளைப் பேண முடியும். அங்கத்துவக் கட்சிகள் தோழமையுடன் செயற்படவும் முடியும். தமிழ் மக்கள் வேண்டி நிற்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் யுத்த வெற்றிவாதத்தை முன்வைத்து ஆட்சியாளர்கள் தொடர்ந்து செயற்படுத்திவரும் பல்வேறுவகை ஆக்கிரமிப்புகள், கலாசார படுகொலைகள் ஆகியவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கு ஏற்ற வல்லுனர் குழுக்களை அமைத்து தீர்வை நோக்கி முன்னேறவும் முடியும்.

ஆனால் இன்றைய தமிழரசுக் கட்சியோ இத்தகைய சிந்தனைகளுக்கு வெகுதூரத்தில் உள்ளது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தனிவழி செல்வதையே நீண்டகாலமாக தனது கொள்கையாகக் கொண்டிருந்தபோதிலும் உள்ளூராட்சித் தேர்தலையொட்டி சில தனிநபர்களையும் குழுக்களையும் இணைத்து ஒரு கூட்டணியாக செயற்படுவதாகக் காண்பிக்க முற்படுகிறது.

கூட்டமைப்பிலிருந்து தனிவழி சென்ற தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஜனநாயக போராளிகள் ஆகிய அமைப்புகள் இணைந்து, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற ஒரு வலுவான கட்டமைப்பாக கடந்த பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றோம். அத்துடன் இம்முறை உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து சமத்துவக் கட்சியும் இணைந்து எமக்கான ஓர் யாப்பின் அடிப்படையில் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து எமக்கான சின்னத்தையும் பெற்று, ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தப்படுத்தி செயற்பட்டு வருகின்றோம்.

தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பின்னர் ஒழுங்கமைக்கப்பட்ட, நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரு ஜனநாயகபூர்வமான ஐக்கிய முன்னணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியே இயங்கி வருகிறது. இதனை வலுப்படுத்த வேண்டியது மக்களின் கடமையும் பொறுப்புமாகும் என்று வேண்டிக்கொள்கின்றோம். ஏனைய கட்சிகளுடனும் இணைந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியானது தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நீங்கள் அளிக்கும் ஆதரவும் ஆணையுமே இந்த முயற்சியை மேலும் முன்கொண்டு செல்ல துணைபுரியும்.

### தமிழ் மக்களின் இன்றைய அரசியல் நிலை

வடக்கு–கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்கு அதிகாரப் பகிர்வு கோரி தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து போராடி வருகின்றன. ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னரும்கூட ஆட்சிக்கு வந்த பேரினவாதச் சிந்தனை கொண்ட சிங்கள கட்சிகளோ முப்படைகள், காவல்துறை, புத்தபிக்குகள் மற்றும் தொல்லியல் திணைக்களம், வனவளத் துறை, மகாவலி அபிவிருத்திசபை ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின்கீழ் கொண்டுவரும் பெருந்திட்டம் ஒன்றை செயற்படுத்தி வருகின்றன. இவற்றிற்கு எதிராக மண்ணையும் மக்களையும் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு தமிழ் மக்கள் மீதும் தமிழ்க் கட்சிகள் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றது. இவற்றிற்கு எதிராக, நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் இலங்கை அரசாங்கத்தின் இனவாத, மதவாத நடவடிக்கைகளை வெளிப்படுத்தி, ஊடகங்களின் ஊடாகவும் இராஜதந்திர சமூகத்தினுடனான சந்திப்புகளூடாகவும் அனைத்து விடயங்களும்வெளிக்கொணரப்பட்டன. ஆனால், இந்நடவடிக்கைகள் சிங்கள ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பு மற்றும் கலாசார படுகொலை நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் எதனையும் ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஓரளவேனும் முடிவுகட்டி எமது மண்ணையும் மக்களையும் காக்க வேண்டுமாயின், அதற்கு முதற்படியாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்த வேண்டுமென ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி இந்தியாவின் தலையீட்டைக் கோரியது. கடந்த ஏழு வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்களை பிற்போட்டு மாகாணசபை அதிகாரங்களை நாடாளுமன்றம் மூலம் கையாள்வதனூடாக காணிகளை அபகரித்தல், சிங்கள குடியேற்றங்களை நிறுவுதல், பௌத்த மக்கள் வாழாத இடங்களில் புதிதாக புத்த கோயில்கள் என அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு இன்றும் தொடர்கின்றது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகம் உட்பட இந்தியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் சில அழுத்தங்களை இலங்கை அரசின்மீது ஏற்படுத்தினாலும்கூட அது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறுகின்றது. அதேவேளை தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியைப் பேணும் பணியின் பெரும்பங்கை இந்தியாவின் பொறுப்பிலேயே உலக நாடுகள் விட்டுள்ளன என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். எனவே இப்பிராந்தியத்தில் அமைதிக்கும் சமாதானத்திற்குமான இந்தியாவின் பங்களிப்பு என்பது சர்வதேசத்தினால் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் அவற்றையும் கருத்திலெடுத்து செயற்படுவது தமிழ்த் தலைமைகளினால் தவிர்க்க முடியாத தொன்றாகும்.

தமிழர் தரப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாக ஒருமித்த கருத்தும் ஒருங்கிணைந்த செயற்பாடும் இல்லாமையின் காரணமாக தங்களால் எதுவும் செய்ய முடியாதிருப்பதாக இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் தொடர்ந்து கூறிவருகின்றது. ஆகவே தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஏற்படும் ஐக்கியம் என்பதே சிங்கள ஆக்கிரமிப்புகளிலிருந்து தமிழ்ப் பிரதேசத்தைப் பாதுகாக்க ஓரளவிற்காவது உதவியாக இருக்கும் என்பதையும் நாங்கள் இந்த அறிக்கையினூடாக வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

தீர்வு முயற்சிகள் தடைப்பட்டு, தமிழ்க் கட்சிகள் மத்தியில் முரண்பாடுகள் தொடர்ந்து, ஐக்கியமின்மை ஏற்பட்டதன் காரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிருப்தி அடைந்த தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான சக்தியான தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவிலான ஆதரவினை கொடுத்தார்கள். இதன் விளைவாக ஆக்கிரமிப்பு நோக்கமுள்ளதும் கலாசார படுகொலை நிகழ்ச்சி நிரலைக் கொண்டதுமான தமது கொள்கைகளை தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்றும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும் தாயகக் கோட்பாட்டை தமிழ் மக்கள் கைவிட்டுள்ளனர் என்றும் ஆளும் கட்சியினர் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.

அதுமாத்திரமல்லாமல் இவர்கள் சந்திக்கும் சர்வதேச இராஜதந்திரிகள் மத்தியில் வடக்கு–கிழக்கிலிருந்து தமிழ் மக்கள் தமக்கு பெருமளவு ஆதரவை வழங்கியிருப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் ஒதுங்கி நின்றால் தாமே பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாகவும் கதையளக்கத் தொடங்கியுள்ளனர். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த அபாயத்திலிருந்து விரைந்து மீண்டெழக்கூடிய தேவை தமிழ் மக்களுக்குள்ளது. இதற்கான முழு முயற்சிகளையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி முன்னெடுக்கும் என்பதையும் இந்த விஞ்ஞாபனத்தின் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

கடந்த ஏழு வருடங்களாக மாகாண

தொடர்ச்சி ▼

# சங்குக் கூட்டின் தேர்தல் விஞ்ஞாபனம்

தொடர்ச்சி ▲

சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டே வருகின்றது. வடக்கு-கிழக்கைப்பொறுத்த வரையில் எமது நீண்ட போராட்டத்தில் கிடைத்த, ஒரு தீர்வு என்பதற்கு அண்மித்த ஒரு முயற்சியாக இந்த மாகாணசபை முறைமை இப்பொழுது அமைந்திருக்கின்றது. ஆனால் சிங்கள அரசுகள் அனைத்தும் இந்த மாகாண சபை முறைமையை எதிர்த்தே வந்திருக்கின்றன. மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளப் பறிக்கப்பட்டுள்ளன. மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தாமல் தமது முகவர்களான ஆளுனர்களை நியமித்து தாம் விரும்பியவாறான நிர்வாகத்தை நடாத்தி வருகின்றனர். இதனூடாக சிங்களக் குடியேற்றங்கள், பலாத்காரமாக காணிகளைப் பறிமுதல் செய்தல், நிர்வாகம் மற்றும் வேலை வாய்ப்புகளில் சிங்களவர்களுக்கே முக்கியத்துவம் போன்ற பல விடயங்களைச் செய்து வருகின்றனர்.

தற்போதைய அநுர அரசும்கூட நாங்கள் தேர்தலை நடாத்துவோம் என்று கூறுகின்ற போதிலும் அதனை நடாத்துவதற்கு விருப்பமற்றவர்களாகவே இருக்கின்றது. இதனால் குறைந்த பட்சமாக எங்களுக்குக் கிடைத்த அதிகார பரவலாக்கம்கூட எமது கைகளை விட்டு நழுவும் நிலையிலேயே தமிழ்ச் சமூகம் இருக்கின்றது. எனவே எமக்குக் கிடைத்த அதிகாரப் பரவலாக்கலை முழுமையாகக் கைவசப்படுத்தி அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டும். ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்தினால் தமிழ்க் கட்சிகள் வெற்றியடையும் என்பதும் மாகாணசபைகள் தமிழர் வசம் செல்லும் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிடயம். அப்படி நடந்தால் தமது கட்டமைக்கப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்பதாலும் சிங்கள கட்சிகள் தோற்கடிக்கப்பட்டு அதிகாரங்கள் அவர்களிடம் இருக்காது என்ற அச்சத்தாலும் இத்தேர்தல்களை நடாத்தக்கூடாது என்பதில் சகல ஆளும் சிங்களத் தரப்புகளும் ஒரே கொள்கையைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலானது மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. இது வெறுமனே உள்ளூராட்சிசபைத் தேர்தல்தானே, உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்கக்கூடியவர்களை தேர்வு செய்வதுதானே என நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஏனெனில் இத்தேர்தலின் முடிவுகள் எமது தாயகத்தின் மீதான ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக்கூடியதாக அமைய வேண்டும். அத்துடன் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகளுக்கிடையில் ஐக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாட்டிற்கான கதவுகளைத் திறப்பதாக அமைய வேண்டும். இனமோதல் தீர்வுகள் தொடர்பில் பேசவல்ல இந்தியா உள்ளிட்ட சர்வதேச சக்திகளின் நிலைப்பாடுகளில் காத்திரமான செல்வாக்கைச் செலுத்துவதாக அமைய வேண்டும்.

எனவே இந்தத் தேர்தலின் முடிவுகளினூடாக, சிங்கள மேலாதிக்க ஆக்கிரமிப்பாளர்களான ஜேவிபி உள்ளிட்ட எந்த சிங்கள கட்சிகளையும் தமிழர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள் என்ற செய்தி மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள ஏனைய கட்சிகளும் ஒருங்கிணைந்து ஒரே குரலில் செயற்படுவதற்கு ஊக்கமளிப்பதாக அமைய வேண்டும். எனவே தமிழ் தேசிய உணர்வுடன், ஊழலற்ற, வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி நிர்வாகங்களைக் கட்டியெழுப்பவல்ல சமூக சிந்தனையாளர்கள் செயற்பாட்டாளர்களைக் கொண்ட, சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டும் என்றும் நாம் வேண்டுகின்றோம்.

நாடாளுமன்ற தேர்தலில் ஜே.வி.பி. என்ற மாயமானை ஆதரித்ததன் மூலம் தவறாக எழுதப்பட்ட விதியை திருத்தி எழுதுவதற்கான சந்தர்ப்பம் இதுவாகும்.

எனவே வாக்காளர்கள் தனிப்பட்ட குறுகிய விருப்பு வெறுப்புகளைக் கடந்து நிலைபேறான உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் வகையில் தமிழ்த் தேசியத்தின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்குமாறு வேண்டுகின்றோம்.

கடந்தகால ஆட்சியாளர்களைப் போலவே வெற்று வாக்குறுதிகளை வழங்குதல், தேர்தல் அண்மிக்கும் போது ஒரு வீதியையோ சிறு காணித் துண்டையோ விடுவித்தல் அதன் மூலம் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக்கொள்ளல் என்பதையே அநுர குமார ஆட்சியும் செய்து வருகின்றது. பல தசாப்தங்களாகப் பார்த்து வந்த இந்த ஏமாற்று நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் பலிகடா ஆகமாட்டார்கள் என்பதை ஆணித்தரமாகக் கூறுவதாக எமது மக்களின் முடிவுகள் அமைய வேண்டும்.

- இந்தத் தேர்தலில் சங்கு சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம், மேற்கண்ட அரசியல் மாற்றங்களுக்கு வழிவகுப்பதுடன் பிரதேச சபைகளின் வழமையான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஊழலற்ற, வினைத்திறன் மிக்க உள்ளூராட்சி நிர்வாகங்களை கட்டியெழுப்புவோம் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.
- உள்ளூராட்சி சபைகளின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளுக்கான நிதியீட்டங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஒவ்வொரு சபையும் தங்களது சொந்தக்கால்களில் நிற்கக்கூடிய அளவிற்கு தேவையான வழிவகைகளைக் கண்டறிந்து செயற்படுத்துவோம்.
- வெள்ள வடிகாலமைப்புத் திட்டங்கள், கால்நடைகளுக்கான நீர்நிலைகள் என்பவை நீடித்து நிலைத்திருக்கும் வகையில் புனருத்தாரணம் செய்யப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட சபைகள் தமக்குள் புரிந்துணர்வை ஏற்படுத்தி, அகற்றப்படும் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவது, இயற்கை உரம் தயாரிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காத்திரமான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.
- பொது மக்களுக்கும் கால்நடை வளர்ப்போருக்கும் இடையூறின்றி, வீதிவிபத்துக்களுக்குப் பெருமளவு காரணமாக இருக்கும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மின்னொளி இல்லாத வீதிகளுக்கு மின்னொளி வழங்குவதுடன் விளையாட்டு மற்றும் வாசிப்புத் துறையும் ஊக்குவிக்கப்படும்.
- ஒவ்வோர் உள்ளூராட்சிசபைகளுக்குட்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் பெற வசதியாக, அச்சபை எல்லைகளுக்குட்பட்ட தச்சு வேலைத்தளங்கள், கம்மாலை வேலைத்தளங்கள், ஒட்டு வேலைத்தளங்கள், கட்டுமான அமைப்புகள், மின் மற்றும் தண்ணீர் குழாய்கள் பொருத்துநர்கள் என அனைத்து தொழில் நிலையங்களும் தொழில் முனைவோரும் பதிவு செய்யப்பட்டு அப்பிரதேச மக்களுக்கான சரியான தகவல்களை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்வோம்.
- சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பொதுச்சொத்துகள் பாதுகாக்கப்படும்.
- பண்டிகை மற்றும் திருவிழா காலங்களில் தென்னிலங்கையில் இருந்து வரும் வியாபாரிகளால் எமது நிரந்தர வியாபாரிகளுக்கு ஏற்படும் வருமான இழப்பைத் தடுத்து நிறுத்தி அவர்களின் வணிகத்தைத் தொய்வின்றி முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- பொது அமைப்புகள், நன்கொடையாளர்களின் உதவியுடன் சகாய வேலைத்திட்டங்களினூடாக சுத்தம், சுகாதாரம் மற்றும் வடிகால் அமைப்புகளைப் பாதுகாக்கும் விழிப்புணர்வுத் திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.
- மக்கள் விரும்பி வாழ்வதற்கேற்ற இடமாக அனைத்துப் பிரதேசங்களும் அபிவிருத்தி செய்யப்பட ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உறுதியுடன் செயற்படும்.

தமிழர்களின் உரிமையை வென்றெடுக்க ஐக்கியம் அவசியம்.

அந்த ஐக்கியத்தின் குறியீடே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி.

அந்தக் கூட்டணியின் சின்னம் சங்கு.

சங்கு எமது மக்களுக்கு விடியலை ஏற்படுத்தும், எதிரிகளுக்கு அபாயத்தை உணர்த்தும்.

– என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 27.04.2025




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நல்ல ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ள தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்றுகொடுக்கப்பட்டபணிகளைமுடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்திற்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.04.2025




இன்று உங்கள் விருப்பத்துக்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிக மாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்தது போல் உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்து வீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரண மாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இரு வரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக் கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண் பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும். ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவன மாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது. இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.




இன்றைய முக்கியமான நிகழ்வு களில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந் துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும்.




# ஜி.எஸ்.பி. பிளஸ் குறித்து ஆராய்வதற்கு வருகின்றனர் ஐரோப்பிய பிரதிநிதிகள்

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி நிதிகள் குழுவொன்று நாளை நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைக்கான நிபந்தனைகளின் முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்வதற் காக மேற்படி குழு நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி நிதிகள் குழுவினர் நாளை முதல் எதிர்வரும் 07ஆம் திகதி வரை நாட் டில் தங்கியிருப்பர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.



2016ல் முதல் தொகுதி பொறியியல் மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்

# யாழ்ப்பாணப் பல்கலைகழகமும் பொறியியல் பீடத்தின் உதயமும்

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் புதுமை, புலமைப்பரிசில் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் ஒரு முன்னணி மையமாக இருத்தல் என்னும் Vision உடனும், தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின் தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப அறிவார்ந்த மற்றும் தொழில் ரீதியாக திறமையான பட்டதாரிகளையும் முதுகலை பட்டதாரிகளையும் உருவாக்குதல், ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி வணிகமயமாக்கல், கல்வி உதவித்தொகையை மேம்படுத்துதல் மற்றும் தொழில் மற்றும் சமூகத்துடன் சமூக, பொருளாதார மற்றும் சமூகத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல் குறிப்பாக வட இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார தேவைகளை மையமாகக் கொண்டு செயல்படுவது என்னும் ஆளைளழைெ உடனும் யாழ் பல்கலைகழகம் யாழ்ப்பாணத்தில் கல்வி சார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

1974 ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று, இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கல்வி அமைச்சரும் துணைவேந்தருமான டாக்டர் அல்ஹஜ் பதியுதீன் மஹ்மூத், யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகத்தை நிறுவிய அறிவிப்பை வெளியிட்டார். இதன் மையமாக திருநெல்வேலியில் உள்ள பரமேஸ்வரா கல்லூரி வளாகம் தேர்வு செய்யப்பட்டது. பரமேஸ்வரா கல்லூரி, பெரும் தானதர்ம செயற்பாட்டாளர் சேர் பொன் ராமநாதன் அவர்களால் 1921 ஆம் ஆண்டு ஒகஸ்டில் நிறுவப்பட்டது.

1974 ஜூலை 19 அன்று, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு. எல்.எச்.சுமனதாசா, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வித்யாலங்கார வளாகத்தின் தமிழியல் மற்றும் இந்து மதப்பிரிவின்தலைவர்டாக்டர்கே.கைலாசபதி அவர்களை யாழ்ப்பாண வளாகத்தின் முதல் அதிபராக நியமித்ததைக் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

1974 ஆகஸ்ட் 1 முதல் அறிவியல், சட்டம், மனிதவியல் பீடங்கள் மற்றும் உடற்தகுதி கல்வி துறை ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பட்டது. இதற்கான அறிவிப்பு, 1974 ஜூலை 25 அன்று வெளியிடப்பட்ட அதி விசேட அரசிதழ் எண் 121/15 இல் வெளியிடப்பட்டது. இது, 1972 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் எண் 1 இன் பிரிவு 18 மற்றும் 85 உடன் இணைந்து பயன்படுத்தப்பட்ட அதிகாரத்தின் மூலம் கல்வி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் துணைவேந்தரால் வெளியிடப்பட்டது.

டாக்டர் கே.கைலாசபதி 1974 ஆகஸ்ட் 1 அன்று முதல் அதிபராக பொறுப்பேற்றார். 1974 ஆகஸ்ட் 9 அன்று, திரு. கே.பி.ஜி.விஜயசுரேந்திர, வித்யாலங்கார வளாகத்தின் துணை பதிவாளர், யாழ்ப்பாண வளாகத்தின் முதல் துணை பதிவாளராக பொறுப்பேற்றார்.

1974 ஆகஸ்ட் 13 ஆம் தேதி, யாழ்ப்பாணக் கல்லூரியின் கல்லூரிப் பிரிவு கல்வி அமைச்சினால் எடுத்துக்கொள்ளப்பட்டு, யாழ்ப்பாண வளாகத்தின் அறிவியல் பீடத்தைத் தொடங்குவதற்காக பல்கலைக்கழகத்துக்கு ஒப்படைக்கப்பட்டது.

1974 அக்டோபர் முதலாம் தேதி, பேராதனை வளாகத்தின் கணிதத் துறையின் தலைவர் பேராசிரியர் பி.கனகசபாபதி மற்றும் பேராதனை வளாகத்தின் வரலாற்றுத் துறையின் டாக்டர் கே.இந்திரபாலா, முறையே அறிவியல் மற்றும் மனிதவியல் பீடங்களின் முதல் பீடாதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்

1974 அக்டோபர் 6 ஆம் தேதி, இலங்கை குடியரசின் அப்போதைய கௌரவ பிரதமர் திருமதி சிறிமாவோ அவர்கள், பரமேஸ்வரா வளாகத்தில் பிற்பகல் 2.25 மணிக்கு நினைவுப் பலகையை திறந்து வைக்க, கல்வி அமைச்சரும் துணைவேந்தருமான டாக்டர் அல்ஹஜ் பதியுதீன் மஹ்மூத் அழைப்பில், யாழ்ப்பாண வளாகத்தை வைபவரீதியாகத் தொடங்கி வைத்தார்.



**கலாநிதி (எந்திரி) சுப்பிரமணியம் சிவகுமார்**

அறிவியல், சட்டம், மனிதவியல் மற்றும் உடற்தகுதி கல்வி துறைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டாலும், 1974 அக்டோபர் மாதத்தில் மனிதவியல் மற்றும் அறிவியல் பீடங்கள் மட்டுமே நிறுவப்பட்டன. 1975 ஆம் ஆண்டில் மனிதவியல் பீடம் கலைப்பீடமாக மறுபெயரிடப்பட்டது, மேலும் துறைகளின் எண்ணிக்கை நான்கு முதல் பத்து ஆக அதிகரிக்கப்பட்டன. அறிவியல் பீடம் கணிதம் மற்றும் புள்ளியியல் பாடங்களை மட்டுமே வழங்கியது. முதல் மாணவர்களாக 208 பேர் சேர்க்கப்பட்டனர்.

1975/76 கல்வியாண்டில், இயற்பியல் மற்றும் உயிரியல் அறிவியலில் பாடங்கள் தொடங்கப்பட்டன, இதில் மொத்தம் 35 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

இசை மற்றும் பாரதநாட்டியக் கல்வியை முன்னேற்றும் நோக்கில், மருதனார்மடத்தில் உள்ள ராமநாதன் கல்லூரி வளாகத்தில் ராமநாதன் கலைகளைக் கழகம் (RAFA) துவங்கப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த முன்னணி அறிஞர்களும் கலைஞர்களும் இந்நிறுவனத்தில் இயக்குநர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் பணியாற்ற அழைக்கப்பட்டனர். திரு. எஸ்.நடேசன் அவர்கள் காலமான பின், 1975 டிசம்பர் 1 முதல் யாழ்ப்பாண வளாகத்தால் இந்த அகாடமி எடுத்துக்கொள்ளப்பட்டது. இது 1992 ஆம் ஆண்டு வரை நுண்கலைத் துறையின் கீழ் இயங்கியது, பின்னர் தனித்த துறையாக உயர்த்தப்பட்டது.

1977 ஆகஸ்ட் 1 அன்று, பேராசிரி

தொடர்ச்சி▼

# யாழ்ப்பாணப் பல்கலைகழகமும் பொறியியல் பீடத்தின் உதயமும்

தொடர்ச்சி▲

யர் கே.கைலாசபதியைத் தொடர்ந்து, பேராசிரியர் எஸ்.விதியானந்தன் யாழ்ப்பாண வளாகத்தின் இரண்டாவது அதிபராக பொறுப்பேற்றார்.

அறிவியல் பீடம் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருநெல்வேலிப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. 1978 ஆகஸ்ட் 7 அன்று கைதடியில் உள்ள ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்தில் மருத்துவ பீடம் தொடங்கப்பட்டது. இது 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. புதிய கட்டிடம் 1988 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. யாழ்ப்பாண பொது மருத்துவமனை 1978 ஆம் ஆண்டு ஒரு கல்வி மருத்துவமனையாக உயர்த்தப்பட்டது.

1979ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி, 1978ஆம் ஆண்டு பல்கலைக் கழகச் சட்டம் (எண் 16) அமல்படுத்தப்பட்டதன் மூலம், இலங்கை பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் சுயாட்சித் தேசிய பல்கலைக்கழகமாக மாறியது மற்றும் "இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" எனப் பெயரிடப்பட்டது.

1980-களின் ஆரம்பத்தில் மைய நூலக கட்டிடம் மற்றும் மாணவர் மையத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், 1987 ஜனவரி 1 முதல் அரசாங்கம் விதித்த பொருளாதார தடைகளின் காரணமாக கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன. நூலக கட்டடத்தின் நிலத்தளத்தின் ஒரு பகுதி மட்டுமே முடிவடைந்து 1986 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டது.

1987 அக்டோபர்-நவம்பர் மாதங்களில் இந்திய அமைதி பாதுகாப்புப் படையினர் நடத்திய ராணுவ நடவடிக்கைகளால் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மற்றும் கல்வி துறைகளின் செயல்பாடுகள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. பல்கலைக்கழக கட்டடங்கள் மற்றும் ஆய்வகங்கள் ஆகியவை பெருமளவு சேதமடைந்தன, மேலும் சில மாணவர்களும் ஊழியர்களும் உயிரிழந்தனர்.

1987 ஆம் ஆண்டு தொடங்கி ஒரு தசாப்த காலம், யாழ்ப்பாணத்தில் நிலவிய அரசியல் மற்றும் ராணுவ சூழ்நிலைகளின் காரணமாக கல்வி வளர்ச்சிப் பணிகளில் தடை ஏற்பட்டது. பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் மீளச் செழிக்க சிரமம் இருந்தது.

1990 டிசம்பர் 3 ஆம் தேதி கிளிநொச்சியில் வேளாண் பீடம் நிறுவப்பட்டது. இது, வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் கட்டடங்களில் செயல்பட ஆரம்பித்தது.

வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி (NPAUC) 1991 ஆம் ஆண்டு வவுனியாவில் தொடங்கப்பட்டு, 1997 மார்ச் 26 ஆம் தேதி அரசிதழ் அறிவிப்பின் மூலம் வவுனியா வளாகமாக மாற்றப்பட்டது.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் திரளாக வெளியேறி பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தற்காலிகமாக கிளிநொச்சி வேளாண் பீடத்திற்கு மாற்றப்பட்டது. பல்கலைக் கழகத்தை மீண்டும் மீண்டும் செயல்படுத்த பல சவால்கள் இருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1996 ஜூலை மாதம் திருநெல்வேலியில் மீண்டும் செயல்பட தொடங்கியது.

தற்போது, யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சியில் பரவியுள்ள 12 பீடங்களைப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது. தற்போதைய இளநிலை மாணவர்கள் மாணவர் எண்ணிக்கை சுமார் 9000 ஆகும், மேலும் முதுநிலை மாணவர் எண்ணிக்கை சுமார் 1000 ஆகும். இந்த மக்கள் தொகையில் சிங்களர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனக் குழுக்களும் அடங்குகின்றனர். பல்கலைக்கழகம் சுமார் 550 கல்வியாளர்கள் மற்றும் 1,300 கல்வி சாரா பணியாளர்களின் சேவைகளைப் பெறுகிறது.

இன்று, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பல துறைகளில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை வழங்கி, இலங்கையின் உயர்கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்றை அமைப்பது பல காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கோரிக்கையாகவும், பிராந்திய மக்களின் நீண்டகால தேவை மற்றும் எதிர்பார்ப்பாகவும் இருந்து வந்தது.

1979 ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் கவுன்சில், பல்கலைக்கழகத்திற்கு கிளிநொச்சியில் ஒரு பொறியியல் பீடம் அமைக்கத் தீர்மானித்தது.

பொறியியல் பீடத்தின் நிறுவலுடன் தொடர்புடைய சுருக்கமான வரலாறு 40 ஆண்டுகளாக நீள்கிறது. 1979 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் செனட்டில் பொறியியல் பீடம் அமைக்க முதல் முறை முன்மொழிவானது, அதற்கு செனட் மற்றும் கவுன்சில் இரண்டும் அங்கீகாரம் அளித்தன. இதை சாத்தியமாய் மாற்றப் பற்றிய ஆய்வுக்குழுவொன்று அமைக்கப்பட்டது, அது 1980 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு (UGC) விரிவான அறிக்கையை சமர்ப்பித்தது. அறிக்கையில் கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை அமைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க பரிந்துரை செய்யப்பட்டது. நீண்ட கால தாமதத்திற்கு பிறகு, 1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கோரிக்கையை ஏற்பதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் (UGC) கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை அமைப்பதை ஏற்றுக் கொண்டது.


ஆரம்பகால கல்வி, கல்வி சாரா ஊழியர்கள் பொறியியல் பீடத்தில் பேராசிரியர் துரைராஜா குடும்பத்தினருடன்

கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை அமைக்க பல்வேறு நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்டபோதிலும், அந்தப் பிராந்தியத்தில் நிலவிய கடுமையான சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் திட்டம் தாமதமாகியுள்ளது.

ஆயுத மௌனிப்பின் பின், பிராந்தியத்தின் நிலைமைகள் மேம்பட்ட பிறகு, 2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செனட் மற்றும் கவுன்சில், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சகம், பொது மக்கள் மற்றும் தொழில்முறை நிபுணர்கள் இணைந்து, சமூகத்தின் விருப்பத்தை நிறைவேற்ற கிளிநொச்சியில் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்த தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் ஆயுத மௌனிப்பின் பின் பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்தனர்.

தொடர்ச்சி▼

# யாழ்ப்பாணப் பல்கலைகழகமும் பொறியியல் பீடத்தின் உதயமும்

**தொடர்ச்சி▲**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செனட் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி நடைபெற்ற தனது 353வது கூட்டத்தில் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கு ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க துணைக் குழுவை நியமித்தது. அந்தக் குழு, முந்தைய துணைக் குழுவின் அறிக்கைகள், தற்போதைய பொறியியல் கல்வி நிலைமைகள் மற்றும் பிராந்தியத்தில் இயல்பை மீட்கவும் வளர்ச்சியை மேம்படுத்தவும் அரசின் வலியுறுத்தல்களை கருத்தில் கொண்டு தனது பரிந்துரைகளை சமர்ப்பித்தது. செனட், 2011 மார்ச் 29 ஆம் தேதி நடைபெற்ற தனது 357வது கூட்டத்தில் அந்த பரிந்துரைகளை அங்கீகரித்தது, மேலும் கவுன்சில் 2011 ஏப்ரல் 3 ஆம் தேதி நடைபெற்ற தனது 357வது கூட்டத்தில் கிளிநொச்சியில் வேளாண் பீடத்துடன் இணைந்தவாறு பொறியியல் பீடத்தை நிறுவ முடிவு செய்தது. பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சகம் இந்தத் திட்டத்தை ஆதரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு பரிந்துரை செய்தன. கலாநிதி (எந்திரி) சுப்பிரமணியம் சிவகுமார் (Dr(Eng) S S Sivakumar இக்கட்டுரையாளன்) அவர்கள் முதல் மூத்த விரிவுரையாளர் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிளிநொச்சி பொறியியல் பீடத்தின் அமைப்பிற்கான ஒருங்கிணைப்பாளராக 2012 டிசம்பர் 4 ஆம் தேதி நியமிக்கப்பட்டார். 2012 டிசம்பர் 5 ஆம் தேதி பொறியியல் பீடத்தின் அமைப்பிற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், 2013 ஜனவரி 4 ஆம் தேதி 12/1724/521/035 என்ற அமைச்சரவை ஆவணத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

பொறியியல் பீட உருவாக்கத்தில் பேராசிரியர் மில்டன் அமரதுங்கா, பேராசிரியர் குமார் டேவிட், பேராசிரியர் நவரத்தின ராஜா, பேராசிரியர் துரைராஜா, பேராசிரியர் ராஜதுரை, பேராசிரியர் வசந்தி அரசரட்டணம் பேராசிரியர் கந்தசாமி, கலாநிதி (எந்திரி) சுப்பிரமணியம் சிவகுமார் (Dr(Eng) S S Sivakumar இக்கட்டுரையாளன்) ஆகியோரின் பங்கு மிகவும் காத்திரமானது. கல்வியியல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலில் பேராசிரியர் அற்புதராஜா, மற்றும் ஆரம்பகால கல்வி, கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்பும் அளப்பெரியது.

தொடக்கத்தில், சிவில் பொறியியல் துறை, மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை, கணினி பொறியியல் துறை, இடைஒழுங்கு ஆய்வுத் துறைகளுடன் பீடம் நிறுவப்பட்டது:

பொறியியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் சேவைகளில் தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் பகுத்தறிவுக்கான முதன்மையான மையமாக இருப்பது என்னும் Vision உடனும், நிலையான வளர்ச்சிக்கு பங்களிக்கும் சமூக, பொருளாதார மற்றும் நெறிமுறை மதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுடன் திறமையான பொறியாளர்களைஉருவாக்குவதன்மூலம்தேசிய மற்றும் உலகளவில் பொறியியலை வளர்ப்பது மற்றும் மேம்படுத்துவது என்னும் Mission உடனும் யாழ் பல்கலைகழக, பொறியியல் பீடம் கல்வி சார் நடவடிக்கைகளை தனது முதல் மாணவர் குழுவை 2013 ஆம் ஆண்டில் சேர்த்தது ஆரம்பித்தது.

முக்கிய கட்டடத்திற்கான திட்டங்கள் மூன்று கட்டங்களாக நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டன. திட்டத்தின் மொத்த செலவுத் தொகை ரூ.2,437 மில்லியன் இலங்கை அரசு நிதியில் இருந்தும். ரூ.550 மில்லியன் இந்திய அரசு நிதியில் இருந்தும் செயல்படுத்தப்பட்டது.

முதலாண்டிற்கான பணியாளர் அங்கீகாரம் பெறப்பட்டு உடனடியாகவே அவற்றை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உடனடி தேவைக்கான நான்கு கட்டடங்களை அமைக்க நடவடிக்கைகள் தொடங்கி ஆய்வக உபகரணங்களின் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டன, நூலகத்திற்கான புத்தகங்கள் நன்கொடையாக பெறப்பட்டுள்ளன.

2014ம் ஆண்டு இலங்கை – இந்திய அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் கீழ் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள, யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மாணவர் திறன் விருத்திற்கான கட்டடத்தொகுதி மற்றும் பொறியியல் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு மாடிக்கட்டடம் ஆகியவற்றை சுமார் 550 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை கட்டடங்களுக்கு தேவையான ஒரு தொகுதி இயந்திர சாதனங்கள், ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை பெற்றுக்கொடுக்கவும் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கு சில வாகனங்களை இவ்வொப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### திட்டமிடலின் போது இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட பொறியியல் பீட கட்டடத் தொகுதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் (UoP), பங்களாதேஷ் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (BUET), கம்போடியா தொழில்நுட்ப நிறுவகம் (ITC), நோர்வே டெலிமார்க் பல்கலைக்கழகம் (TUC), நோர்வே உயிரியல் அறிவியல் பல்கலைக் கழகம் (UMB) ஆகியவற்றுடன் NORHAD உதவியின் கீழ் ஒரு கூட்டாண்மை திட்டத்தை (Waso) வடிவமைத்து, இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து பங்குதாரர்களுக்கும் US$ 3,101,403, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு இந்த திட்டத்தின் கீழ் 4 ஆண்டுகள் US$ 548,581 வழங்கப்பட்டது.

இரண்டாவது கூட்டான்மை திட்டமாகிய Erasmus+ (WaterH) திட்டத் தீர்மானம் சிறந்த மதிப்பீட்டை பெற்று அனுமதிக்கப்பட்டது. போலந்து, ஜெர்மனி, இலங்கை, சீனா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஒத்துழைப்பாளர்களுடன் நாங்கள் சமர்ப்பித்த திட்டம் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் அனைத்து பங்குதாரர்களுக்கும் (நோர்வே, போலந்து, ஜெர்மனி, இலங்கை, சீனா மற்றும் உக்ரைன்) – 1,330,000 வழங்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு இந்த திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகள் (அக்டோபர் 2015 முதல்) –100,000 வழங்கப்பட்டது.

மேற்படி இரு கூட்டான்மை திட்டங்களுக்கும் இணைப்பாளராக இக்கட்டுரையாளன் Dr (Eng) S S Sivakumar கடமையாற்றி உள்ளார்.

2024 ஆம் ஆண்டில், இந்தப் பீடம் தனது 12 வது மாணவர் குழுவை சேர்த்தது, இது இலங்கையில் பொறியியல் கல்வியில் அதன் வளர்ச்சியைக் காட்டுகிறது. இவ்வாறு, கிளிநொச்சி பொறியியல் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், உள்ளூர் சமூகத்திற்கும் முக்கியமான சாதனையாக திகழ்கிறது, மேலும் நாட்டின் பொறியியல் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது.

2012 டிசம்பர் 4 ஆம் தேதி கிளிநொச்சி அறிவியல்நகர் பொறியியல் பீட முதலாவது பொறியியல் மூத்த விரிவுரையாளர் மற்றும் பீடத்தை நிறுவுவதற்கான ஒருங்கிணைப்பாளர் ஆக என் பணிக்காலம் தொடங்கியதிலிருந்து 2024 அக்டோபர் மாதம் இளைப்பாறும் வரை எனக்கு கிடைத்த மூலதனமான ஆதரவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகத்திற்கும் என் உள்ளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இச்சிறுகுறிப்பை முடிக்கிறேன்.